# திராவிடநாடு

20—10—57 | வார வெளியீடு | விலை 16 காசு


★

# "வாளெடுத்துப் போவோம்!"


[ இரா. பரமசிவம் ]


கூடுகட்டத் தெரியாத குயிற்கூட்டம் காக்கைக்
கூட்டினிலே போயமர்ந்தால் எதிர்க்காதோ காகம்?
ஓடுகின்ற புனலாற்றை அணைபோட்டுத் தடுத்தால்
உருண்டோடிப் பாயாதோ அணைமீறி வெள்ளம்?
காடுவயல் நெல்லோடு புல்முளைக்கக் கண்டால்
களைந்தெறிய மாட்டாரோ? ஆளவந்தோர் இன்று
கேடுரைத்துப் பழிக்கின்றார் நம்மினத்தை! பெண்காள்!
கேளீரோ! வாங்களடி வாளெடுத்துப் போவோம்!!

நிழல்தூங்கும் சிங்கத்தை குள்ளநரி தீண்டி
நின்றெதிர்த்தால் பாயாதோ கூர்நகத்துச் சிங்கம்?
முழுநிலவை வானத்து முகில்மறைத்துக் கொண்டால்
முகில்கிழித்துக் கிளம்பாதோ தேனிலவு? சின்னக்
குழந்தைகள் விளையாடி மகிழ்கின்ற இடத்தில்
குடியிருக்க விடுவரோ கொட்டுகின்ற தேளை?
அழகான திராவிடத்தை நம்நாட்டை வந்தோர்
அழிக்கின்றார்! வாங்களடி! அறிவுவாளெடுத்துப் போவோம்!!

# ஆச்சாரக்கள்ளன்

"மனிதருள் மாணிக்கத்தை வீழ்த்திவிட்டாயேடா பாபி! நீயும் ஒரு மனிதனு? உனக்குப்போய் அன்பு காட்டினரே, இந்த உத்தமர்! ஐயோ, வந்தாரை வரவேற்கும் அந்தக் கரங்கள் செயலற்றுக் கிடப்பதைப் பார்! வருக, வருக என்று உன்னை உபசரித்த வாயைப் பாரடா வன்னெஞ்சனே!" என்று பாய்ந்தான், அவ்வீரன், வாளை உருவிக்கொண்டு.

கிழே குத்துண்டு கிடந்தவர், "**தத்தா**" என்று மெதுவாக அழைத்தார்.

"காத்திருக்கிறேன் பிரபோ! கட்டளையிடுங்கள், வீரமில்லா இந்த வீணனை, குள்ளநரிக்குணம் பெற்று உங்களைக் குத்தி வீழ்த்திய குடிகேடனை, கண்டதுண்டமாக்குகிறேன். என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள் இப்போதே!!;'

"நீ ஒன்றும் செய்யக் கூடாது. என்னை இவர் குத்திவிட்டார் எனும் செய்தி தெரிந்தால் ஊரார் இவரைவிடமாட்டார்கள். ஆகவே இவருக்கு எந்தவித ஆபத்தும் வராமல், நகர்ப்புறம் வரையில் கொண்டுபோய் நீ விட்டுவிட்டு வர வேண்டும்..."

"என்ன பிரபோ, இது! பாம்பினும் கேடுகெட்ட இந்தப் பாதகனுக்கா, அன்பு காட்டுகிறீர்கள்?"

"ஆம், தத்தா! இவன் பாதகன் தான்; ஆனல், இவன் தாங்கியிருக்கும் வேடம், எது? கவனித்தாயா! அதனல்தான், பாதுகாப்போடுகொண்டுபோய் விடச்சொல்கிறேன்..."

'போ!' என்று சைகை காட்டினர், சாவின் மடியிலே கிடந்த அந்த அரசர்! ஏறெடுத்துப் பார்த்தான், எதிரே நிற்பவனை. 'வா' என்ருன். குனிந்த தலை நிமிராமல், கொலைகாரனுக்குப் பாதுகாப்பாகச் சென்ருன். அவனைக் கொண்டுபோய் விட்டுவிட்டு, வேகவேகமாக மன்னன் கிடந்த இடத்துக்கு வந்தான்.

"தத்தா! அவரைக் கொண்டுபோய் விட்டாயா...எந்த ஆபத்தும் அவருக்கு வரவில்லையே"

"அவர் என்று அழைக்காதீர்கள் அரசே! அந்த அயோக்கியனை, அற்பனை, மறைந்து வந்து உங்களைக் கொன்ற பேடியை..."

"வீரனே! என் காதுபட, அப்படியெல்லாம் இகழாதே. பத்திரமாக நீ கொண்டுபோய்ச் சேர்த்தாய் என்று கேட்டதும்; மனதுக்கு நிம்மதி வந்துவிட்டது. எந்தக் கவலையும் இல்லை. நான், மகிழ்ச்சியோடு, சாகிறேன்."

குனிந்தான் தத்தன்! கோமான் பிணமாகக் கிடந்ததைக் கண்டு கோவென்று அலறினன்—வருத்தத்தைப் பன்மடங்காக்கிற்று, கொலைகாரன், வலையில் சிக்கியவனைப்போலக் கிடைத்தும், பழிக்குப்பழி வாங்க முடியவில்லையே எனும் எண்ணத்தால்!

*

தமிழகம், சின்னஞ் சிறு குறுநில மன்னர்களின் கோட்டமாக விளங்கிய காலம். **திருக்கோவலூர்** நகரத்தைத்தலைநகராகக் கொண்ட குறுநிலத்தை ஆண்ட திருமுடிக்காரியின் வழியிலே வந்த மன்னவன் அவன். மலையமான் என்பர். அவனுக்கோர் எதிரி! **முத்தநாதன்** எனும் பெயர் கொண்ட, இன்னெரு சிற்றரசன். எப்படியாவது, மலையமானை வீழ்த்தி, அவனுடைய நாட்டைக் கவர்ந்து கொள்ள வேண்டும் என்கிற பேராசை பிடித்தாட்டிற்று முத்தநாதனை. எப்படி வீழ்த்துவது? வேலும் வாளும் கொண்டு போருக்குச் சென்ருலோ, புறமுதுகிட்டு வரவேண்டியதுதான்! புலியை, எலி எதிர்த்தால் ஏற்படும் கதியே கிடைக்கும்!! எனவே, என்ன செய்வது என்று குழம்பினன். வீரத்தால், மலையமானை வீழ்த்த முடியாது, ஆகவே வேறு ஏதாவது வழியில் முயற்சிக்க வேண்டியதுதான், என்று முடிவு செய்தான.

மலையமான், மாவீரன்! ஆனல், மகேசன பேர் சொல்லிவரும் ஆண்டிகள், அடியார்கள் எனில் அவர்களுக்கு அடி பணிந்து, அவர்கள் கேட்பதை யெல்லாம் வழங்கு வதையே பெரியதோர் பேறெனக் கருதியவன். இதையறிந்திருந்த முத்தநாதன் மனதில் ஒரு யோசனை உதித்தது.

மறுநாள், மலையமான் மாளிகை வாயிலில், சிவனடியார் கோலம் பூண்டு, "சிவ! சிவ!", என்று வாய் உச்சரிக்க, நுழைந்தான் முத்தநாதன். அவன் நுழைந்ததை, 'திருத் தொட்ட புராணம்' விவரிக்கிறது,

"மெய் பெல்லாம் நீறுபூசி
வேணிகள் முடித்துக் கட்டி
கையினில் படை கரந்த
புத்தகக் கவளி ஏந்தி
மைபொதி விளக்கே என்ன
மனத்தினுள் கருப்பு வைத்து
பொய்தவ வேடம் கொண்டு
புகுந்தனன் முத்த நாதன்.

வீரமும் அதைவிட பக்தியும் அதிகம் பெற்றிருந்த மன்னவன் ஓடோடியும்சென்றுஉபசரித்தான. "வரவேண்டும், வரவேண்டும். என்ன பாக்கியம் செய்தேனே நீங்கள் அடியெடுத்து வைக்க. ஏழையின் இல்லில் தங்கி, எனது அன்புக் காணிக்கைகளை ஏற்றுக் கொள்ளவேண்டும," என்று கெஞ்சினன். கும்பிட்டான். காலில் வீழ்ந்து வணங்கினன்.

வஞ்சகனே; இதுதான் சமயமென்று, ஏடுகளுக்கிடையே வைத்திருந்த கத்தியை எடுத்தான்—'பக்தனின்' முதுகிலே பாய்ச்சினன். 'ஐயோ', என்று அலறி வீழ்ந்தான், அரசன். மெய்க்காப்பாளன், தத்தன் ஓடிவந்தான். வந்தது, சிவவேடத்தில் பாதகன் என்று தெரிந்தது. பழி வாங்கத் துடித்தான், தத்தன். ஆனல், அப்போதும், மலையமானுக்கு இருந்த பக்திப் போதை விடவில்லை.

"பாதகன்தான் இவன்! விரோதிதான்! விரும்பத் தகாதவன் தான்! ஆனல், நான் வணங்கும் சிவனடியார் உருவில் வந்துவிட்டானே. ஏதாவது செய்தால், சிவ உருவுக்கு நான் அபசாரம் செய்ததாக அன்றே ஆகும்? வேண்டாம்! அந்த இகழ்ச்சி எனக்கு ஏற்படவேண்டாம். சிவ உருவில் வந்தவரை, பத்திரமாகக் கொண்டு போய்,

(13-ம் பக்கம் பார்க்க)

# உறுதிகொள்க

16] ஆண்டு சந்தா ரூ. 8 [20–10–57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 14

**அக்டோபர் 13** இந்தி எதிர்ப்பு நாளைப்பற்றி, ஏட்டில் வெளியிடுமாறு கவிதைகள் எழுதியனுப்பியவர்கள், ஏராளம். படிக்கப் படிக்க, 'தமிழே! உன்னை யாராலும் ஒன்றும் செய்யமுடியாது,' எனும் ஆனந்தமே அதிகமாயிற்று. வீரம், விவேகம், வரலாற்றுச்சான்று, இந்தியை இங்கு நுழைய விடோம் எனும் எக்காளம் இத்தனையும் தாங்கித் தித்திக்கும் தமிழில் முத்து முத்தாய் கவிதைகளை வடித்திருக்கின்றனர், பல தோழர்கள்.

மதிலே எனும் வடமா—மலை
முடி, சேரனின் சிலைபார்!
மலிதே சிகந் தவழ்நாளினில்
மடிதா யகம் நிலைபார்!

என்று ஒருவர் அழைக்க,

இரைவேட்ட புலி போலந்த
இழிவகற்ருர் தமிழன ஆர்த்து
கறைபட்ட வாளெ டுத்தே
களங்கத்தைப் போக்க எண்ணி
சிறைபட்ட மானைப் போல
சிலிர்த் தாங்கே நின்றிருந்த
மறைகற்ற வடக்குப் 'பெண்'ணின்
மயிர்பிடித்தே யிழுத்து வந்தான்

என ஒரு கவிதை சீற,

தரங்கெட்ட தலையாட்டும் பொம்மைகளும்
தக்கதுணை யாய்நின்று சதியேசெய்வார்
மறங்காக்கும் வீரர்காள் பறிபோகும்
மானத்தைக் காப்பதற்கே விரைந்துவாரீர்!

என்று ஒன்று அழைக்க,

தென்னவர்கள் உளக்கடலில் தோணியோட்ட
திட்டமிட்டே இந்தியெனும் படகினுலே
மின்னலென விரைகின்ருர்வடவர்' இன்னும்
மீளாத நிலையில் நாமிருத்தல் நன்ருே?

எனத்தட்டி ஒரு கவிதை கேட்க,

அமிழ்தாகிய தமிழால் உயர்வடைவார் சிலர்குறியாய்
அவர்வாழ்வினில் வயிருென்றையே பெரிதாகவே நினைப்பார்
அயலாகிய மொழிமேல்மனம் வைப்பார் கதைகதைப்பார்
அருந்தாயினை உயிரோடவர் புதைப்பார் படுகுழியில்!

என்று ஒன்று இடித்துரைக்க, கவிதைகள் அனைத்திலும் கனலும் புனலும் தெறிக்கின்றன! கல்லூரி ஆசிரியர்கள் முதல், கலப்பையோட்டும் தோழர் வரையில், தமிழின்பால் தாங்கள் கொண்டுள்ள ஆர்வத்தைக் கவிதைகளாக்கி அனுப்பியிருக்கின்றனர். அத்தனையையும், 'அக் 13' க்குள் வெளியிட, நேரமும் இல்லை; இடமும் இல்லை. எனினும், அவைகளின் மூலம், 'தமிழை'க் கண்டோம் — தமிழ் பெற்றுவரும் மறுமலர்ச்சியைக் கண்டோம்-தமிழுக்கொரு தீங்கெனில் தோள்தட்டிட நிற்கும் தோழர்களைக் கண்டோம் — அவர்கள்பால், கவிதை புனையும் அளவுக்குத் தமிழார்வம் வளர்ந்திருப்பதைக் கண்டோம் — இது, சாதாரணமானதா! ஒரு போதும், இல்லை. தமிழ், மனமெனும் மாளிகையேறிவிட்டது என்பதை உணர்த்துகின்ற காட்சியன்ருே, இது? தமிழில் பேசுவதே அநாகரிகம் என்கிற காலம் ஒன்று இருந்தது—தமிழ்ப் புலவர் என்று சொல்லிக்கொள்ளும்போதே தலையைத் தாழ்த்தியோரையும் கண்டிருக்கிருேம்—தமிழ் ஐயா, என்ருல் கேலியும் கிண்டலும்கூடச் செய்தவர்களுண்டு — தமிழ்தானே, என்று அலட்சியமாகப் பதில் தந்தவர்களும் உண்டு. ஆனுல், அந்தக் காலம்போய், தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! தமிழ் எங்கள் புலவர்க்கு வேல்! என்று சங்கு முழக்குகின்றது, நாடு. கருத்தோட்டமிக்க கவிதைகளைத், தெள்ளு தமிழில் தேனினுமினியதாய் வடித்துத் தர முன்வருகின்றனர், பலர். ; தூங்கிய புலி, விழித்துக்கொண்ட நிலை! துள்ளிவரும் எதிர்ப்பைச் சாய்த்துவிடும் வீரம், தாண்டவமாடுகிறது, எங்கும்!!

பட்டிதொட்டிகள் முதல், பேரூரும் நகரங்களும் உள்பட, கடந்த 13ம் நாள் "இந்தியை எதிர்ப்போம்", என்று முரசொலி கிளப்பிய காலையில், எங்கும் பேரார்வமும், கொடுமையினை உடைத்தெறிவோம் எனும் எழுச்சியும் ஏற்பட்டது. ஒரே ஒருநாள், நாவலர் விடுத்தார் அழைப்பு, நாட்டவருக்கு! அன்று சென்னை முதல் குமரி வரை, இந்தியை எதிர்த்து, முழக்கம் கேட்டது. ஆயிரக்கணக்கில், பல்லாயிரக்கணக்கில், இலட்சக் கணக்கில், மக்கள் கூடிநின்று 'சபதம்'

எடுத்துக்கொண்டிருக்கின்றனர். எப்பக்கம் வந்து புகுந்துவிடும்? இந்தி எத்தனை பட்டாளம் கூட்டிவரும்? பார்த்துவிடுகிறோம்! நாட்டைத் தான் நலியச்செய்து வருகின்றனர் எனில் 'வீட்டு' மொழிக்கும் வேட்டு வைப்பதோ வடவர், இதையும் அனுமதிக்க நாமென்ன மரக் கட்டைகளோ, என்று மார்தட்டிடும் மறத் தமிழர்களின் அணிவகுப்பைக் கண்டோம், நாடெங்கும்.

**இந்தி எதிர்ப்பினை,**
**தமிழகத்தின் ஏககுரலை,**
**இந்தி ஆதிக்க வெறுப்பை,**

உணரும் எவரும் ஒரு நிமிடம் யோசிக்கவே செய்வர்! பொங்கும் கடல்போல் காட்சியளிக்கிறதே மக்கள் மன்றம்—ஓட்டைப் படகேறி நாம் அதைக் கடந்திட முயல்கிறோமே, சரியா, என்று சிந்திக்கவே செய்வர்!! ஏனெனில், இந்தி அரசுமொழியாவதை, திராவிட முன்னேற்றக் கழகம், ஒரு கட்டுக்கோப்போடு நின்று எதிர்க்கிறது. கழகத்தில் சேராத ஆனல் நாட்டு வாழ்வில் இரண்டறக் கலந்த எல்லாத்துறைப் பெரியார்களும், தத் தமது அளவில், எதிர்க்காமலில்லை. முன்னள் கவர்னர் ஜெனரலாயிருந்த ஆச்சாரியாரும் சரி, கல்லூரிப்பேராசிரியர்களும் சரி, வேறு அரசியல் கட்சியினரும் சரி, அனைவரும் ஒரே முகமாக நின்று, டில்லியின் அவசரக்கோலத்தைக் கண்டிக்கின்றனர். இந்தக் கண்டனக் கணைகளுக்கு, மதிப்புக்கொடுக்கவேண்டியதுதான், மக்களாட்சியின் மாண்பாகும். ஆனல், டில்லி பீடம், இந்த மாண்பினை உணர்ந்ததாகத் தெரியவில்லை. நாடு 13ம் தேதி எதிர்ப்பு நாள் கொண்டாடிய மறுதினமே அவசர அவசரமாக ஒரு உத்தரவைப் பிறப்பித்துள்ளனர், டில்லியினர்.

**இந்தி பேசப்படாத பகுதிகளில்**
**இந்தியைக்**
**கட்டாயமாக்கும்படி**

மாநில அரசுகளுக்கு டில்லி, தாக்கீது அனுப்பியிருக்கிறது! கட்டாயபாடமாக்க வேண்டுமாம் இந்தியை-இப்படி கட்டாயபாடமாக்காமலிருந்து வருவது சென்னை அரசு ஒன்றுமட்டும்தானம்—ஆகவே, இந்த உத்தரவு சென்னைக்காகவே இடப்பட்டதாகத் தெரிகிறது! இந்தி, கட்டாய பாடமாகவேண்டும்—நமது குழந்தைகள், இதிலும் 'மார்க்' வாங்கியாகவேண்டும், கட்டாயமாக!!

புண்பட்ட உள்ளத்துக்கு மருந்திடுவர், அன்புள்ளம் கொண்டவர்கள். அதனல்தான், அமைதியான ஆர்ப்பாட்டங்கள் மூலம், தமது அதிருப்தியை அரசுக்குத் தெரிவிக்கிறது, நாடு. அவ்விதம் தெரிவித்தபோதிலும், "புண்பட்ட உள்ளமா? இதோ, அம்பு எய்கிறேன்!" என்று உத்தரவு மேல் உத்தரவிடுவோரை என்னவென்று சொல்வது?

தென்னகம், எதிர்க்கிறது இந்தியை!-தெரியும் டில்லிக்கு.

தென்னகம், இந்தி எதிர்ப்பு நாள் கொண்டாடுகிறது!!—தெரிந்திருக்கவேண்டும், ஒரு அரசுக்கு.


இருந்தும், தாக்கீது அனுப்பப்படுகிறது—செகண்டரி பள்ளிகளில் இந்தியைக் கட்டாய பாடமாக்கும்படி.

என்னென்பது இதனை! அமைதி வழியையும், அன்பு மார்க்கத்தையும், தமது குறிக்கோளாகக்கொண்டு வாழும் தென்னகத்தின் எழுச்சியைப் பார்த்துக் கேலி செய்கின்றது போலும் டில்லி! அன்றோர் நாள், தமிழர்தம் வீரத்தினைப் பழித்த வடவருக்குப் புத்தி புகட்டினன் சேரன் செங்குட்டுவன் என்கிற வரலாறு உண்டு. இமயத்தில் கொடி பொறித்தோனும், கங்கைக் கரையை உழுதவனும், தமிழ் மண்ணில் உண்டு. அத்தகைய வீரமரபினை, கேலி செய்கின்றனர், வடவர்! **நக்கீரர்** எனும் புலவர் வீற்றிருந்த பட்டிமன்றம் ஒன்றிலே, எம்மொழி சிறந்தது எனும் சர்ச்சை உண்டாக, **ஆனந்தக்குயவன்** என்பான் வடமொழியே சிறந்தமொழியென்று வாதிட்டுத் தமிழை இழித்துரைத்து சீரழிந்தான் என்று கதைகூறி, வியந்துரைக்கும் புகழ்க்காதைகள் கூறுவோரும் உண்டு. தமிழை, கண்ணாக, உயிராக, செல்வமாக, வாழ்வாக எண்ணியெண்ணி இறும்பூதெய்திடும், புது எழுச்சி மலர்ந்து மணம் வீசுகின்றது இதுபோது! தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன் என்று கவிஞர் சூளுரைக்கின்ற காலம் இது!! இப்போது, வடவர், தென்னகம் கண்டிக்கிறதென அறிந்தும்,

**இந்தியை,**
**குழந்தைகள் தலையிலும்**
**சுமத்த**

தாக்கீது அனுப்பியுள்ளனராம்! உண்மையில்,

(13-ம் பக்கம் பார்க்க)




"பெரியய்யா! செயற்கைச் சந்திரனைப் பார்த்தீர்களோ......"

"பார்க்கவில்லை, தம்பி! அது சம்பந்தமான விபரங்களைப் பத்திரிகையில் படிக்கிறபோது ஆச்சரியமும் ஆனந்தமும் கலந்து கலந்து வருகிறது..."

"விஞ்ஞானிகளின் மூளை, விதவிதமாகவெல்லாம் வேலை செய்கிறது பெரியய்யா — அமெரிக்காவில் ஒருவர் 'ஆண்கள் துணையில்லாமலே பெண்கள் குழந்தை பெறும்' ஆராய்ச்சியில் வெற்றி கண்டிருப்பதாக அறிவிக்கிறார்..."

"என்ன! ஆண்கள் இல்லாமல் பிள்ளையா?"

"ஆமாம்! உலகம் போற்றும் அரசியல் வாதிகள்—கவிஞர்கள்—கலைஞர்கள் — அறிவு மேதைகள் 'ஒத்துழைப்பு மட்டும்' கிடைத்தால், அவர்களைப் போன்ற அறிவும் உருவும்உள்ள குழந்தைகளைக் கூடப் பெற்றுக்கொள்ளலாமாம் எந்தப் பெண்மணியும்!! ஒரு புட்டியில் அடைக்கப்பட்டு, 'இஞ்சக்ஷன்' செய்தால், விரும்பிய குழந்தைகளைப் பெறலாமாம்..."

"ஆச்சரியமாயிருக்கிறதே மணிமுடி......"

"ஆமாம் பெரியய்யா! மீன்கள் இருக்கின்றன பாருங்கள், அவைகளைச் செயற்கை முறையில் கருத்தரிக்க வைத்து முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் ஆராய்ச்சியில் பெங்களூரில் பிராணிகள் ஆராய்ச்சித் துறை விஞ்ஞானிகள் வெற்றி பெற்றுள்ளனராம்......"

"வியப்புமேல் வியப்பு பெருகிக் கொண்டேயிருக்கும்போலிருக்கிறதே, விஞ்ஞான வளர்ச்சியைப் பார்க்கிறபோது......"

"ஆமாம்! இப்படி விஞ்ஞானம் ஒரு பக்கம் பரவிக்கொண்டிருக்கிறது. அதே சமயத்தில், விஞ்ஞானத்தை வானளாவப் போற்றும், படித்த மேதைகள் என்ன செய்கிறார்கள்?"

"அதையேன் கேட்கிறே மணிமுடி; புரட்டாசி மாதம் வந்தாலும் வந்தது 'கோவிந்தா' போட்டுக் கொண்டு திருப்பதிக்குச் செல்வோர் ஆர்ப்பாட்டம் காணச் சகிக்கவில்லை. விஞ்ஞானம் வளருது ஒரு பக்கம்! மொட்டையடிப்பது, வளருது இன்னொரு பக்கம்!!"

"பெரியய்யா! ஒரு அதிசய செய்தி கேட்டீர்களோ — கேசம் இருக்கிறதல்லவா தலையில், கேசம் ......அதன் மூலம் கோடிக்கணக்கான டாலர் கிடைக்கப்போகிறதாம், பாகிஸ்தானுக்கு!!"

"என்ன மணிமுடி? வெறும் கேசத்துக்குப் பணமா!"

"ஆமாம்! அமெரிக்காவில் அதைக்கொண்டு விதவிதமான அலங்காரப் பொருள்களைச் செய்யப் போகிறார்களாம — அதற்காகப் பாகிஸ்தான் சர்க்காரைக் கேட்டார்களாம்--பாகிஸ்தானும், சிகை அலங்கரிப்புத் தொழிலாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறது, அண்மையில்..."

"உண்மையில் மணிமுடி! இயற்கை வழங்கிடும் ஒவ்வொரு பொருளையும் மனிதன், தன் அறிவைக்கொண்டு பயன்படுத்திக் கொள்ளலாம். பலனும் பெறலாம்......"

"ஆனால் எங்கே பெரியய்யா, நம்மவர்களுக்கு அந்த ஆசை பிறக்கிறது! பாருங்களேன்! கடந்த 20-நாட்களாகச் சென்னை படுகிற பாட்டை...'இந்து' நடத்துகிற சீனிவாசன், 'மெயில்' உரிமையாளர் அனந்தராம கிருஷ்ணன், முன்னாள் நீதிபதிகள், பலப்பல வழக்கறிஞர்கள், நல்ல அறிவுள்ளவர்கள், அத்தனைபேரும் சேர்ந்து கொண்டு படாதபாடுபடுத்துகிறார்கள்......'கல்கி' 'விகடன்' 'கதிர்' 'இந்து' எல்லா ஏடுகளும் ஒரே முகமாக நின்று ஒத்தூதுகின்றன ........"

"எதைப்பற்றிச் சொல்கிறாய் மணிமுடி!"

"வேறெதைப்பற்றிச் சொல்வேன் பெரியய்யா! அறிவுபெற்றவர்கள், காஞ்சி சங்கராச்சாரியாரைப் பல்லக்கிலேவைத்து சென்னைக்கு அழைத்துச் சென்று தினசரி பல்லாயிரக்கணக்கான மக்களைக் கூட்டிவைத்து, 'பாரீர்! பாரீர்!' என்று விளம்பரம் செய்கிறார்கள்......"

"நான்கூடப் படித்தேன் மணிமுடி! பரமசிவனுக்கு ஊமத்தம் பூவில்தான் அதிக திருப்தி...... எருக்கம் பூ, தும்பைப் பூ, ஊமத்தம்பூ, இவற்றைக்கொண்டு ஆண்டவன் மகிழ்ச்சி யடைந்துவிடுகிறான். எவரும் வேண்டாத எளிய பொருள்களைக்கொண்டு ஈசுவரன் திருப்திப்பட்டுவிடுகிறான், என்றுகூட ஒருநாள் பேசினாராமே சங்கராச்சாரியார்......"

"ஆமாம் இன்னொரு தினம், 'வில்வ இலை'யின் மகிமையைப் பற்றிக்கூடப் பேசினார்....ஆனால், இப்படிஈசுவரனைச் சாதாரண இலைகள் பூக்களைக்கொண்டு வணங்கினால்கூடப் போதும் என்று கூறுகிற 'லோககுரு' இதேபோன்ற இலைகளையும் பூக்களையும் சிஷ்ய கோடிகளிடமிருந்து பெற்று திருப்தி அடைந்து விடுகிறாரா பெரியய்யா......"

"ஏன்! இப்படி ஊருக்கு உபதேசம் வழங்கும் அவரும், அதே போலத்தானே நடந்துகாட்டுவார்?"

"அப்படியிருந்தால், கனகாபிஷேகம் நடக்குமா! தங்கத்தையும் வெள்ளியையும் தன்மீதுகொண்டு வந்து கொட்டும்படி சொல்லு

வார்ா!! வெள்ளிப் பல்லக்குக் கேட்குமா, பீதாம்பரம் தேவைப்படுமா ......"

"நிசம்தான் மணிமுடி நீ சொல்லுவது!"

"ஆனால், விஞ்ஞான உலகத்தை அனுபவிக்கும் அறிவாளிகள் மனதில் இந்த எண்ணம் எழும்பவேயில்லையே பெரியய்யா! சங்கராச்சாரியாருக்குச் செய்கிற சேவையே பெரிது, என்றல்லவா கருதுகிறார்கள்!!"

"அந்த இடம்தான் எனக்கும் புரியவில்லை, மணிமுடி......"

"டாக்டர் சி.பி. இராமசாமியிருக்கிறாரே, அவர் எப்படிப்பட்டவர் என்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களல்லவா?"

"ஆமாம்! இரண்டுமாதங்களுக்கு ஒரு தடவை அமெரிக்காபோய் வருகிறார்...... திருவாங்கூருக்கே திவானாயிருந்தார்... அ' பல்கலைக் கழகத் துணைவேந்தராகக்கூட இருந்தார்.........அவர் வகிக்காத பெரிய உத்தியோகம் இல்லை...... நல்ல அறிவாளி......"

"அவர் மனைவி சீதம்மாள் என்பவர் வடாற்காடு மாவட்டத்திலுள்ள விரிஞ்சிபுரம் மார்க்கபந்து கோயிலுக்கு ஒரு காணிக்கை செலுத்தினாராம் 1920ல்....."

"என்ன காணிக்கை?"

"60 பவுன் எடையில், 1250 ரூபாய் மதிப்பில் அம்மனுக்கு ஒரு தங்க ஒட்டியாணம் செய்துவைத்தாராம்......"

"அதற்கென்ன?"

"பெரிய அறிவாளியின் மனைவி, இப்படித் தன் பக்தியைக் காட்டிக் கொண்டார்.........அந்த ஒட்டியாணத்தைச் சமீபத்தில் அதிகாரிகள் விலைபோட்டுப் பார்ப்பதற்காக எடுத்துப் பார்த்தபோது, தங்க ஒட்டியாணம் இல்லையாம்! முலாம் பூசப்பட்ட ஒரு ஒட்டியாணம் இருந்ததாம் — 1250க்குப் பதில் இதன் மதிப்பு 28—11—0 பெறும் என்று கண்டு திகைப்புற்றனராம்......"

"என்ன காரணம் மணிமுடி?"

"பக்தியைச் செலுத்த 1,250 செலவில் செய்துவைத்தார் அம்மையார்! பக்தியை ஆண்டவனருகிலிருந்தே பரப்புகிறவர்களில் யாரோ, அபேஸ் செய்துவிட்டு, போலி நகை ஒன்றை வைத்திருக்கிறார்!! இந்தச் செய்தியும், சங்கராச்சாரியாரின் 'திக்விஜயம்' பற்றி எழுதும் 'மெயில்' ஏட்டின் 8—10—57 இதழில்தான் வந்துள்ளது..."

"இதையும் தெரிவிக்கிறார்கள் உலகுக்கு! அதே சமயத்தில், வெளிவேடங்களுக்கும் மதிப்புக் கொடுத்து வளர்க்கிறார்கள்!! விசித்திரமான மனிதர்கள், மணிமுடி—உண்மையில் வேடிக்கையான மனிதர்கள்..."

★

# "HOMELAND"

—*—

HOMELAND சென்னையிலிருந்து இனி வெளிவர இருக்கிறது. அதற்கான அனுமதி கிடைத்துவிட்டது; ஏற்பாடுகள் முடிவடைந்து வருகின்றன.

"நம் நாடு" அச்சகத்தில், Homeland அச்சிடப்பட்டு' 'அறிவகம்' இராயபுரம் என்ற முகவரியிலிருந்து வெளிவரும்.

இனி, Homeland சம்பந்தமான கடிதப் போக்குவரத்துகள், மணியார்டர்கள், இன்ஷ்யூர் ஆகியவைகள்

**சி. என். அண்ணாதுரை**<br>
HOMELAND<br>
'அறிவகம்' — இராயபுரம்<br>
**சென்னை - 13.**


என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

"திராவிட நாடு" சம்பந்தமானவைகளை வழக்கம்போல், காஞ்சீபுரம் முகவரிக்கு அனுப்பவும்.

HOMELAND சென்னையிலிருந்து, **அக்டோபர் 27-ல்** வெளிவருகிறது.

வாசகர்களும், விற்பனையாளர்களும் இடையிலே ஏற்பட்ட காலத் தாழ்வுக்குப் பொறுத்தருள வேண்டுகிறேன்.

அன்பன்,<br>
**அண்ணாதுரை.**




**வேலையில்லாத் திண்டாட்டத்தை ரஷ்யா ஒழிக்க முடிந்தது எப்படி?**

முதலாவதாக இயந்திரத் தொழில்கள் யாவும் அதிவேகமாக வளர்ந்தோங்கியதால் எல்லோருக்கும் வேலை கிடைப்பது சாத்தியமாகியது. ஆலைகளும் தொழிற்சாலைகளும் மக்களுடைய உடமைகளாக இருந்ததால்தான் தொழில்கள் மிகத் துரிதமாக வளர்ச்சி பெற முடிந்தது. இரண்டாவது உலக யுத்தத்தால் ஏற்பட்ட பெருஞ் சேதங்களையும் மீறிக்கொண்டு 1929-க்கும் 1955-க்கும் இடையே சோவியத் நாட்டில் இயந்திரத் தொழில்களின் பொருளுற்பத்தி 20 மடங்கிற்கும் அதிகமாகப் பெருகிவிட்டது.

சோவியத் யூனியனில் தொழில்களின் வளர்ச்சி திட்டமிட்ட ரீதியில் ஏற்படுவதால், இங்கு உழைப்பாளி மக்கள் நெருக்கடிகளாலோ, அவற்றின் விளைவாக ஏற்படும் வேலையின்மையாலோ அச்சுறுத்தப்படுவதில்லை.

சோவியத் சமுதாயத்தைச் சேர்ந்த சகல பகுதி மக்களின் பௌதிக, கலாச்சாரத் தேவைகளை மென்மேலும் பூரணமாகப் பூர்த்தி செய்யவேண்டும் என்பதே சோவியத் நாட்டின் உற்பத்திப் பெருக்கத்தின் நோக்கமாகும். மக்களுடைய தேவைகளின் வளர்ச்சிக்கும் தொழில்களின் உற்பத்திப் பெருக்கத்திற்கும் அங்கு எல்லையே கிடையாது. எனவேதான் சோவியத் மக்கள் தம் நாட்டில் என்றுமே வேலையின்றித் தவிக்கும்படி நேரிடாதென்ற உறுதியான நம்பிக்கை பெற்றுள்ளனர்; எதிர்காலத்தைப்பற்றி கவலையின்றி வாழுகின்றனர்.

*

**சோவியத் தொழிலாளர்கள் நாள் ஒன்றுக்கு எத்தனை மணி நேரம் வேலை செய்ய வேண்டும்?**

பெரும்பாலான தொழிற்சாலைகளிலும் எல்லா அலுவலகங்களிலும் வேறு நிலையங்களிலும் 8 மணி நேர வேலை அமுலில் இருந்து வருகிறது. சனிக்கிழமைகளிலும் விடுமுறை விழாத் தினங்களுக்கு முந்திய நாட்களிலும் வேலை 2 மணி நேரம் குறைக்கப்படுகிறது. பூமிக்கு அடியில் வேலை செய்வோருக்கும் (சுரங்கத் தொழிலாளர்கள் முதலியோர்), உடல் ஆரோக்கியத்திற்குத் தீங்கிழைக்கவல்ல தொழில்களில் (இரசாயனத் தொழிலைச் சேர்ந்த சில ஆலைகள்) ஈடுபடுவோருக்கும் 6 அல்லது 7 மணி நேர வேலை அமுலில் இருந்துவருகிறது.

ஆருவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது (1955 - 1960) சகல வகையான ஆலைத் தொழிலாளர்களுக்கும் அலுவலகச் சிப்பந்திகளுக்கும் 7 மணி நேர வேலையும் தரைக்கு அடியிலே வேலை செய்யும் நிலக்கரி, உலோகக் கனி சுரங்கத் தொழிலாளர்களுக்கு 6 மணி நேர வேலையும் அமுலுக்குக் கொண்டுவருவதென்று சோவியத் சர்க்கார் தீர்மானித்திருக்கிறது.

ஆலைத் தொழிலாளர்கள், அலுவலகச்சிப்பந்திகள் இவர்களுடைய சம்பளத்தில் எவ்வித வெட்டுமின்றி சோவியத் நாட்டில் வேலை நேரம் குறைக்கப்பட்டு வருகிறது.

*

**ஒரே வேலையைச் செய்யும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமமான சம்பளம் கிடைக்கிறதா? பெண்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளாத தொழில்கள் உண்டா?**

சோவியத் நாட்டில் சகல தொழில்களிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான வேலைக்கு சமமான சம்பளம் கிடைக்கிறது. ஆனால் பெண்களுடைய வேலை நிலைமைகளைப் பற்றிய சட்டங்களுக்கும் ஆண்களுடைய வேலை நிலைமைகளைப் பற்றிய சட்டங்களுக்கும் வித்தியாசங்கள் உள்ளன. உடல் ஆரோக்கியத்தைப் பாதிக்கக்கூடிய வேலைகளிலும், உலோகத்தை உருக்கி ஊற்றுவது, தார் போடுவது போன்ற பல வேலைகளிலும் பெண்களை ஈடுபடச் செய்வது சட்டவிரோதமானதாகும். பெண்களுடைய உடல் நலத்தைப் பாதுகாக்கும் பொருட்டே இந்தச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. கடினஉழைப்பு தேவைப்படும் உலோக உருக்குத் தொழில், இரசாயனத் தொழில் போன்ற பல தொழில்களில் பல கட்டுப்பாடுகளின் பேரில்தான் பெண்களை ஈடுபடச் செய்ய முடியும்.

*

**சோவியத் தொழிலாளர்களுக்கு மாத அல்லது வாரச் சம்பளம் கொடுக்கப்படுகிறதா? அல்லது அவரவரும் செய்து முடிக்கும் வேலை அளவுக்கு ஏற்பச் சம்பளம் தரப்படுகிறதா?**

பெரும்பாலான சோவியத் தொழிலாளர்கள் அவரவரும் செய்து முடிக்கும் வேலை அளவின் அடிப்படையில்தான் ஊதியம் பெறுகிருர்கள். இந்த முறைப்படி அந்தந்தத் தொழிலாளரும் அவர் செய்து முடிக்கும் குறிப்பிட்ட வேலை அளவுகளுக்கு ஏற்ப வருமானம் பெறுகிருர். இதையன்றி அந்தந்தத் தொழிலாளரும் குறைந்த பட்ச அளவிற்குமேல் செய்து முடிக்கும் வேலை அளவுக்குத் தக்கபடி போனஸ் அளிக்கும் முறையும் அமுலில் இருந்துவருகிறது. இதன்படி வேலையில் குறிப்பிட்ட சாதனைகளைக் காணும் தொழிலாளர்களுக்கு அவரவரும் செய்து முடிக்கும் வேலை அளவுக்கு

ஏற்ப வழக்கமான ஊதியத்துடன் போனஸ்களும் அளிக்கப்படுகின்றன.

அவரவரும் செய்து முடிக்கும் வேலை அளவுக்கு ஏற்றபடி சம்பளம் கொடுக்கும் முறை, உழைப்பின் உற்பத்திச் சக்தியைப் பெருக்குவதற்கு மிகவும் உகந்த முறையாகும். தொழிலாளர்களுடைய சொந்த நலன்களும் நாட்டின் பொது நலன்களும் ஒன்றுக்கொன்று முரண்படாமல் இசைந்து ஒத்துப்போவதற்கு இம்முறை தக்கதோர் உத்தரவாதமாக அமைகிறது. அவரவரது வேலையையும் நேரடியாக அளந்து நிர்ணயம் செய்வது கடினமாயிருக்கும் சில துறைகளில் மட்டும்தான் (அதாவது மின்சார ஊழியர், இயந்திரங்களுக்கு மசகு போடுவோர், மின்சார நிலையப் பார்வையாளர் போன்ற பலரின் வேலை சம்பந்தமாக மட்டும்தான்) இங்கு மாத அல்லது வாரச் சம்பளம் கொடுக்கும் முறை கையாளப்படுகிறது.

*

**சோவியத் தொழிலாளர்களுக்கு எவ்வளவு சம்பளம் கிடைக்கிறது?**

சோவியத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் சம்பளத்தின் அளவு அவர் ஈடுபட்டுள்ள தொழிலையும், அங்குள்ள வேலை நிலைமைகளையும் பொறுத்திருக்கிறது. தரைக்கடியில் வேலை செய்யும் தொழிலாளர்கள்தான் (நிலக்கரி, உலோகக்கனி சுரங்கத் தொழிலாளர்கள்தான்) மிகவும் அதிக அளவு சம்பளம் பெறுகின்றனர். இந்தத் தொழிலாளர்களுக்கு அவரவரது திறமைக்குத் தக்கபடி மாதம் சராசரி 1,500 ரூபிளிலிருந்து 3,000 ரூபிள்வரை சம்பளம் கிடைக்கிறது. உலோக உருக்கு, எஞ்சினீயரிங் தொழில்களில் வெப்ப ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு 1,000லிருந்து 2,500 ரூபிள் வரை மாதச் சம்பளம் கிடைக்கிறது. வேலை நிலைமைகள் அவ்வளவு கடினமாயில்லாத மென்—இயந்திரத் தொழில்களையும் உணவுப் பண்டத் தொழில்களையும் சேர்ந்த தொழிலாளர்களுக்கு 500லிருந்து 1,300 ரூபிள்வரை மாதச் சம்பளம் கிடைக்கிறது. மிகவும் அதிக திறமையுடைய தொழிலாளர்களுக்கு மேலே குறிப்பிட்டதைக் காட்டிலும் அதிகமான சம்பளம் அளிக்கப்படுகிறது.

*

**சோவியத் தொழிலாளர்களுக்குச் சம்பளத்தையன்றி வேறு அலவன்சு ஏதாவது கிடைக்கிறதா? குடியிருப்பு வீடு கிடைக்கிறதா?**

சோவியத் நாட்டில் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளங்கள் மட்டுமல்லாது, தேவைப்படும் போது பலவகையான அலவன்சுகளும் கிடைக்கின்றன. தொழிற் சங்க நிதியிலிருந்தோ, தொழிற்சாலை டைரக்டர் நிதியிலிருந்தோ அவர்களுக்கு தனி செலவுகளுக்கான பண உதவி அளிக்கப்படுகிறது. ஆரோக்கிய நிலையங்களிலும் விடுமுறை இல்லங்களிலும் உடலாரோக்கிய நிலையங்களிலும் அவர்கள் கைச்செலவின்றி தங்குவதற்கு வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

இதர சோவியத் மக்களைப் போலவே தொழிலாளர்களும் இலவச வைத்திய உதவி பெற்று வருகிறார்கள். தொழிலாளர்களுடைய குழந்தைகள் பள்ளிக்கூடங்களிலும் தொழில் நுட்பப் பள்ளிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் கட்டணமின்றிக் கல்வி பயிலுகின்றனர்.

தமது வேலையில் குறிப்பிட்ட சாதனைகளைக் காணும் தொழிலாளர்களுக்குப் போனஸ் அளிக்கப்படுகிறது.

ஆலைநிர்வாகமும் ஆங்காங்குள்ள சோவியத்துக்களும் தொழிலாளர்கள் குடியிருப்பதற்கான குடித்தனப் பகுதிகளைக் கொடுத்து உதவுகின்றன. தொழிலாளர்கள் சொற்ப அளவு வாடகையே கொடுக்கின்றனர். தொழிலாளர்கள் வேலையை விட்டு விலகிய பிறகும், வேறொரு வேலையைப் பெற்ற பிறகும் அதே வீட்டில் தொடர்ந்து வசிக்கலாம். தொழிலாளி இறந்த பிறகும் அவரது குடும்பம் அதே வீட்டில் குடியிருக்கலாம்,

சொந்தத்தில் வீடு கட்டிக் கொள்ள விரும்பும் தொழிலாளர்களுக்கு நீண்ட காலத் தவணையில் சர்க்கார் கடன்கள் கொடுத்து உதவி புரிகிறது.

*

**சோவியத் நாட்டில் வீட்டு வாடகை எவ்வளவு கொடுக்கவேண்டும்?**

நகரங்களில் பெரும்பாலான வீடுகள் அரசாங்கத்திற்குச் சொந்தமானவை. அரசாங்கத்திற்குச் சொந்தமான வீட்டில் ஒரு பகுதியிலே வாடகைக்கு இருப்பவர் (சமயலறை, நடைபாதை முதலியவற்றைத் தவிர்த்து) ஒரு சதுர மீட்டர் பரப்பிற்கு 1 ரூபிள் 32 கோபெக் வீதம் வாடகை கொடுக்கிறார். பென்ஷன் பெறுவோர், வேலை செய்யும் சக்தி இழந்தவர்கள், சராசரி அளவிற்கும் குறைவான சம்பளம் பெறும தொழிலாளர்கள் முதலியோரிடமிருந்து மேற்கூறிய அளவைவிட 33லிருந்து 50 சதவிகிதம் வரை குறைவான வாடகையே வசூலிக்கப்படுகிறது. பொதுவாக தொழிலாளர்கள் தமது சம்பளத்தில் 4லிருந்து 6 சத விகிதத்தையே வாடகைக்காகவும் தமது குடித்தனப் பகுதியைப் பழுதின்றி தக்கபடி கவனித்துக்கொள்வதற்காகவும் செலவு செய்கிறார்கள்.

*

## 'இளிச்சவாயர்'கள்!

நியுகினியாவுக்கு, காமன்வெல்த் திரைப்படப் பிரிவைச் சேர்ந்த தயாரிப்பாளர் அண்மையில் போயிருந்தாராம். அத்தீவின் கிழக்குப் பகுதிகளிலுள்ள ஆதிவாசிகளைப் படம் பிடிக்கப்போன போது, ஒரு அதிசயமான காட்சியைக் கண்டாராம். பலர், சிரித்துக் கொண்டேயிருந்தார்களாம்! விட்டு விட்டு அல்ல, ஓயாது, கலகலவென்று சிரித்துக்கொண்டேயிருந்தார்களாம்!! நகைச்சுவை, நல்லதோர் சிரிப்பை உண்டுபண்ணும்—வாய்விட்டுச் சிரித்துவிட்டு இருந்து விடுவோம், நாம். ஆனால், ஓயாது சிரித்துக்கொண்டேயிருப்பதென்றால்? இந்த விநோதம் கண்டு திகைத்த அவர், என்னவென்று விசாரித்தபோது, 'சிரிப்பு' என்கிற 'வியாதி' அங்கே யிருப்பதாகவும், சில சமயங்களில் திடீரென்று காலரா, அம்மையைப்போல் பரவுமென்றும், ஒருமுறை வந்துவிட்டால் பிறகு நிற்காதென்றும், இந்த வியாதி வந்தவர்கள் சிரித்துச் சிரித்துக் கடைசியில் சாவதே வழக்கமென்றும், தெரியவந்ததாம். இந்த விசித்திரமான வியாதிக்கு இதுவரையில் எவ்வித மருந்தும் கண்டுபிடிக்கப்படவில்லையாம்.

# "திராவிட ஆட்சிமுறை"

'திராவிடநாடு பிரிந்துவிட்டால் இது எப்படி இருக்கும்?' 'அது என்ன ஆகும்?' - என்று பலர் வகைவகையாகக் கேள்விக் கணைகளை எடுத்துத் தொடுத்தவண்ணம், ஏதோ செயற்கரிய செய்துவிட்டவர்களைப்போல மார்பை நிமிர்த்திக் கொள்வதுண்டு. திராவிட நாட்டில் கடவுள் இருக்குமா? கோயில் இருக்கலாமா? கல்விக் கூடங்கள் எவ்வாறு அமையும்? சமுதாயம் எவ்வாறு இருக்கும் என்றெல்லாம் பலர் கேட்டவண்ணம் உள்ளனர். இப்படிக் கேட்போரிலே சிலர் அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலிலேகூடக் கேட்பது உண்டு. அவர்களுக்கு இருக்கின்ற ஐயங்களைத் தீர்க்க வேண்டியது நம்முடைய கடமையே. வேறு வகையினர் சிலர் "என்ன சொல்லிவிடமுடியும் இவர்களால்" என்று தங்களுக்குத் தாங்களே மகிழ்ந்து கொள்ளுவார்கள்.

எது எவ்வாறு ஆயினும் இதைப்போன்ற எந்தெந்த வகை வினா ஆயினும் சரி அத்தனைக்கும் விடைகளைக் கண்டிருக்கின்றார் இராசை கி. அரங்கசாமி அவர்கள்.

"திராவிட ஆட்சிமுறை **333**" என்ற பெயரில் 333 செய்யுள்கள்கொண்டதோர் நூலை அவர் யாத்துள்ளார்.

**வாழ்க்கை மன்றம்**
**ஆட்சி மன்றம்**
**ஆய்வு மன்றம்**

என்று மூன்று பிரிவுகள் அமைத்துக்கொண்டு ஒவ்வொரு பிரிவிலும் சிறந்த முறையில் நல்லதோர் சமுதாய அமைப்பினை ஆசிரியர் சித்தரித்துக் காட்டியுள்ளார்.

இல்வாழ்க்கை இன்பத்துடனும் பண்புடனும் நடைபெற்றால்தான் நாட்டு வாழ்க்கையில் நன்மையும் அமைதியும் இருக்கும் என்ற கருத்து 'வாழ்க்கை மன்றம்' பகுதியில் வலியுறுத்தப்பெறுகின்றது.

இந்த உலகில் வாழுகின்றவரையில் இதிலே இன்பமும் துன்பமும் கண்டு நுகர்ந்து பயன் பெறுவதனைவிட்டு மேலே சென்றால் மேல்நிலை உண்டு என்று கூறுவாரை

—இறந்தபின்
பேரின்பம் என்றிங்கு பேசிடுதல்
சூதாகும்
பேரின்பம் வாழ்வினிலே பேண்

என்று தெளிவுறுத்துகின்றார்.

இல்வாழ்க்கையில் இன்பம் குன்றாமல் பெருகி நிற்றலுக்கு ஆசிரியர் ஆணும் பெண்ணும் கல்விக் கண்பெற வேண்டும் என்பதனை வற்புறுத்தி அவர்களின் காதலில் கனியும் மக்கள் செல்வம் தனி மனிதர்களால் வளர்க்கப்பட்டு தனிமை உணர்ச்சிபெறுவதைத் தவிர்க்க அரசாங்கத்தின் ஆதரவில் அமையும்.

"சேய்வளர்ப்புச் சாலைதனில்
சேய்களைக் காப்பாற்றி."

வரவேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். டாக்டர் மு. வரதராசனாரின் "கி. பி. 2,000" என்ற நூலிலும் இக்கருத்துக் காணப்பெறுவது இங்கு நினைவு கூரத் தகுந்ததாகும்.

சோம்பித் திரிவது சீர்கேடு என்பதனையும் ஆசிரியர்மறவாமல் கூறியுள்ளார்.

இல்லத்தில் வாழ்ந்து அரசியலைப் பற்றி எண்ணம் எழுகின்ற பேர்களுக்கு அரசியல் இவ்வாறு அமையும் என்பதனை எடுத்துக் கூறும் 'ஆட்சி மன்றம்' பகுதியில்

கூட்டாட்சி யாகவே
கூடித் திராவிடர்கள்
நாட்டாட்சி பூண்டிடுதல்
நன்று.

என்று 'திராவிடக் கூட்டாட்சி' அமைதலுக்கு வித்தும் உரமும் இடப்படுகின்றது.

அவ்வாறு அமையும் திராவிட நாட்டில்

வேலையில்லாத் திண்டாட்டம்
வீண்வறுமைப் போராட்டம்

இவைபோன்றவை யெல்லாம் ஒழிக்கப்படவேண்டும் எனறும், மக்கள் நல்ல வாழ்க்கையைப் பெறுதல் வேண்டும் என்றும் வலியுறுத்தப் பெறுகின்றது.

திராவிட நாடு அமைந்தாலும் வரி வாங்கத்தானே செய்வார்கள் என்று மருள வேண்டாம். நாட்டு நன்மைக்கான செலவினங்கட்குத் தேவைப்படும் பொருளைத் தொழில்களை அரசுரிமை ஆக்கிடுதல் மூலம் படைத்துக் கொள்ளலாம் என்றும், வீண் செலவைப் படைக்கும் போர்ப் படைகளை நிரந்தரமாக வைத்திராமல்

...நேரும்
தொழில் செய்யும் நேரம்
தொழில் செய்து நாளும்

பழுதின்றிப் போர்பழகல் பங்கு என்றும், எடுத்துக் காட்டுகின்றார்.

இறுதிப் பகுதியாம் ஆய்வு மன்றத்தில் நாட்டின் அறிவுப் பணிகளுக்கான வேலை முறைகளை வகைப்படுத்தி இன்னின்ன முறைகளில் நாட்டின் அறிவுச் செல்வத்தைப் பெருக்கிடுதல் வேண்டும் எனக் கூறுகின்றார்.

*

தனித் திராவிட நாட்டில் ஆட்சி முறை எப்படி இருத்தல் வேண்டும் என்பதை விளக்கவந்த இந்நூலாசிரியர் அன்றைய சங்க காலத்தில் நிகழ்ந்த ஆய்வு முறைகளை மேற்கோளாக எடுத்துக் காட்டியிருப்பது பெரிதும்பொருத்தமும் பாராட்டக்கூடியதுமாக அமைந்திருப்பதுடன், தனித் திராவிடத்தில், மக்கட்பேரவையே அன்றித் தனிப்பட்ட மனிதனின் அதிகாரம் சிறிதும் இடம் பெறுதென்பதைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

தனித் திராவிட நாடு இவ்வாறெல்லாம் இருத்தல் வேண்டும் என ஆசிரியர் கூறியிருப்பன பழந் தமிழரின் பண்பாட்டை ஒட்டி உருவாகி இருக்கும் நல்ல கருத்துக்களாகும். உரிமை உடைமையில் பொதுமை வேண்டும் என்பதும், பசிப்பிணி தொலைக்கப்பட வேண்டும் என்பதும், நல்ல அமைதியான அறிவு நிரம்பிய சமுதாயம் இருந்தல்

வேண்டும் என்பதனையும் தாம் படைத்துள்ள செய்யுள்களில் செம்மையுற எடுத்தியம்பியுள்ளதைப் போலவே, பழந்தமிழ் இலக்கியங்களில் சீரும் சிறப்பும் அமைந்துள்ள பல பகுதிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றைப் பிற்சேர்க்கை போல் 'திராவிடத்தின் சீர் முறை' எனத் தந்துள்ளார்.

தமிழில் இன்றைய தினம் உரை நடை நூல்களே வருகின்றன. செய்யுள் நூல்களைக் காணோம் என்று கூறுவார்க்கு விடைபோல் இந்நூல் முற்றிலும் செய்யுள் வடிவில் அமைந்துள்ளது. அதிலும் முதல் மூன்று பகுதிகள் வெண்பாக்களாக அமைந்துள்ளன.

நல்ல,எளிய,இனியபாமுறையில் செவ்விய கருத்துக்களைத் திறம்பட எடுத்தோதி, திராவிட நாட்டில் இப்படி வாழவேண்டும் எனத் திராவிட மக்களுக்கு விடுக்கும் அன்பழைப்பு என்று இந்நூலினைக் கருதலாம்.

தமிழர், தெலுங்கர், கன்னடியர், மலையாளிகள் இந்நால்வரும் கலந்த திராவிடம் ஓர் இன அடிப்படைகொண்ட நாட்டுப் பகுதி என்பதனை ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார்.

கன்னடமும் ஆந்திரமும்
  கார்மலையா ளந்துளுவும்
மன்னுதமிழ் நாட்டினரின்
  மாண்போடு—பின்னமற
ஒற்றுமையாய் வாழ்ந்திடுவர்
  ஊக்கமொடு தென்னாட்டில்
ஒற்றுமைக்கு வித்திதுவாய் ஓது

என்று தென்னாட்டு ஒற்றுமையை நிலைநாட்டி நாம் சேர்ந்து வாழுவதின் சிறப்பினையும், மனிதனுக்கு நாட்டுப் பற்றுத் தேவை என்பதனையும் நன்கு விளக்கியுள்ளார்.

ஆசிரியர் இதுபோல் நல்ல கருத்தமைந்த நூல்களை வெளியிட்டுத் தமிழ் மக்களுக்குத் தொண்டு செய்ய இந்நூல் அவருக்குப் பெருத்த துணையாக இருக்கும் எனக் கருதுகின்றோம்.

இதன் விலை ரூ. 1—00

கிடைக்கும் இடம்:—

திருக்குறள் பதிப்பகம்,
இராசிபுரம்
சேலம் மாவட்டம்

என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.




எண்ணிப்பார்க்க முடியாத ஆண்டுகளுக்கு முன்பு ஒரே தீக்குழம்புமட்டும் இருந்தது. அது தன்னைத்தானே வெகு வேகமாகச் சுற்றிக்கொண்டிருந்தது. சுற்றச் சுற்ற அதன் ஓரத்தில் ஒரு பிரிவு ஏற்பட ஆரம்பித்தது. இவ்வாறு ஒரே கோளமாக இருந்த தீக்குழம்பு, தன்னைச் சுற்றி ஒரு வளையத்தை உண்டாக்கியதன் மூலம் இரண்டாகப் பிரிந்தது. மற்று மற்றும் பல வளையங்கள் இதே போல் உண்டாக ஆரம்பித்தன. கடைசியாகப் பத்து வளையங்கள் தன்னிலிருந்து பிரிந்தவுடன் அது மேலும் பிரிவு உண்டாவதை நிறுத்திக்கொண்டது. பிறகு ஒவ்வொரு வளையமும் தன் சுழற்சியால் மீண்டும் பிளவுபட ஆரம்பித்தது. இதன் காரணமாக நடுவில் சூரியனும், அதைச்சுற்றி புதன் (Mercury), வெள்ளி (Venus) பூமி (Earth) செவ்வாய் (Mars,) சிறு பகுதிகளைக்கொண்ட ஒரு சட்டம் (Planatoid zone) ஜுபிடர் (Jupiter)சனி(Saturn)விண்மம் Uranus வருணன் (Neptune), புளூடோ (Pluto)என்ற பத்துக் கிரகங்களும் உண்டாயின. இவை எல்லாம் சூரியன் எவ்வாறு சுழல்கிறதோ அதேபோலவே சுழல்கின்றன என்று 'லாபிலாஸ்' (Lapilas)என்னும் விஞ்ஞானி கூறுகிறார்.

தனியான தீக்கோளம் ஒன்று சுற்றிக்கொண்டிருந்தது. வெகு தூரத்திலிருந்து மற்றொரு கோளம் சுற்றிக்கொண்டே வரும்போது இக்கோளத்தின் அருகில் வர நேர்ந்தது. வெகு தூரத்திலிருந்து வந்த அக்கோளத்திற்கு பூவிறுப்பு சக்தி அதிகம். எனவே அக்கோளத்தின் பூவிறுப்பு சக்தியால் முதல் தீக்கோளத்திலிருந்து 5 பகுதிகள் பிரிந்தன. ஒரு பக்கத்தில் பிரியும்போது அது மற்ற எதிர்ப் பக்கத்தையும் (Opposite side) பாதித்தது. ஆகவே மற்ற பக்கத்திலிருந்தும் 5 பகுதிகள் பிரிந்தன. மொத்தம் 10 பெரும் பகுதிகள் பிரிந்தன. தண்ணீரில் ஒரு கல்லைப் போட்டால் பெருந்துளிகள் சிலவும், சிறு நீர்த்திவலைகள் பலவும் மேலே கிளம்புவதைப்போல 10 பெரும் பகுதிகளுடன் எண்ணிறந்த சிறு பகுதிகளும் வெளிப்பட்டன. பெரும் பகுதிகள் பத்தும் வெகுதூரத்திலிருந்துவந்த மற்றக் கோளத்தைப் பின்தொடர்ந்தன. ஆனால் அக்கோளம் வேகமாகச் செல்லவே, இப்பகுதிகள் பத்தும் பின்னடைந்தன; ஆகர்ஷண சக்தியிலிருந்து விடுபட்டன. எனவே மீண்டும் தங்கள் மூலாதாரமான சூரியனைச் சுற்ற ஆரம்பித்தன.

அவை சுற்றுவது கோழி முட்டை வடிவத்தில் அமைந்தது. அப் பகுதிகள் சூரியனின் அருகில் வரும்போது முதலில் சூரியனிலிருந்து விலக ஆரம்பித்தன—இவற்றை இடிக்கவே, அப்பகுதிகள் பத்தும் தங்களைத் தாங்களேயும் சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்ற ஆரம்பித்தன. இப்படியாகச் சூரியனிலிருந்து பிரிந்த பத்துக் கிரகங்களும் தங்களைத் தாங்களே சுற்றிக்கொண்டும், சூரியனை ஒரே வட்டத்தில் கோழி முட்டை வடிவத்தில் சுற்றியும் வர ஆரம்பித்தன. மற்ற சிறு பகுதிகள் ஒவ்வொரு கிரகத்தையும் சில சில சுற்ற ஆரம்பித்தன. இவ்வாறு பூமியும் மற்ற கிரகங்களும் உண்டாயின என்று 'சேம்பர்லின்' (Chamberlin) 'மோல்டன்' (Moulton)என்பவர்கள் கூறுகிறார்கள்.




"கனிரசம், நீ!"

"போதும், உமது கொஞ்சுதல். நகரும், அப்பால்......"

"கோபம் ஏன் கோகிலமே!"

"ஐயய! எவ்வளவு அசடு வழிகிறது முகத்தில்......"

"அத்தனையும் ஆனந்தமாகிவிடும், கண்ணே, நீ மட்டும் பிடிவாதத்தைத் தளர்த்தினால்......"

"இப்படித்தானே, மூலைவீட்டு மூக்காத்தாளிடமும் கொஞ்சுவீர்... ......"

"சேச்சே! ஆந்தைக்கண்ணி, அவள். முறப்பல்லி— முதலில் உன்னைப்போல் பேசத்தெரியுமா, அவளுக்கு. நீ, நிலா! அவள் இருட்டு!!"

"அவளிடம் பேசுகிறபோது' என்னைப்பற்றியும் இப்படித்தானே சொல்லுவீர்?"

* * *

கட்டிய மனைவி வீட்டிலிருக்க, அர்த்தராத்திரியில் 'ஆள் வேட்டை' ஆடுபவன், இந்தக் கேள்விக்கு என்ன பதிலைச் சொல்லுவான்?

கண்ணல்ல — உன்னைப்போல் ஒரு அழகி உண்டோ — உயிர்தரியேன் ஒரு கணமும் — ஆசைக் கண்ணுட்டியல்லவோ, நீ!—இப்படி விதவிதமாக, வார்த்தைகளை அள்ளிக் கொட்டுவானல்லவா, வந்த வேலை முடிந்தால்போதும் என்கிற எண்ணத்தில். அதே காட்சிதான் கண்டோம், அன்பர் கிருஷ்ணமாச்சாரியார், அமெரிக்காவில் நடந்த விதம்பற்றிக் கேள்விப்படும் போது!! கோபம் கொண்டிருக்கும் பணமோகினியின் தயவைப்பெற, இவர் பேசிய பேச்சுகளும், குழைந்த குழைவுகளும், அய்யய்ய நினைக்க நினைக்க வெட்கமாகயிருக்கிறது. நேரு அவர்களால் இந்தியாவின் பெருமையே, உலகத்திரையில், உயர்ந்திருப்பதாகக் கூறுகிறார்கள்! ஆனால், கிருஷ்ணமாச்சாரியார், "ஐயனே! மெய்யனே! அருட்புரியும் எமக்கு. உமதருளில்லையேல், உய்யோம். எமது இந்தியாவே, உமது கருணைக்காகக் காத்துக்கிடக்கிறது," என்று திருப்பல்லாண்டு பாடியிருக்கிறார் —நீங்கள் தரும் உதவிக்குப் பாத்திரமாக நாங்கள் நடந்துகொள்வோம் என்று பன்னிப் பன்னிச் சொல்லியிருக்கிறார்.

இந்தியாவை உங்களுக்கு விற்கவும் தயார்! — என்றார், கிருஷ்ணமாச்சாரியார், என்று சொல்கிறது 'கல்கி' ஏடு. அந்தளவுக்கு, அங்கே அவர் கெஞ்சி, குழைந்து, கும்பிட்டு அந்தாதிபாடி, அவர்களுக்கு எது பிடிக்குமோ அந்தப் பல்லவியை இசைத்து, ரஷ்யாவின் கம்யூனிசத்தை இகழ்ந்துபேசி, 'ஆள் வேட்டை'யாடும் அர்த்தராத்திரி மைனர்போல் பல்லைக்காட்டி, சொல்லை வீசிவிட்டுத் திரும்பி வந்துகொண்டுள்ளார், இங்கு!!

போனமச்சான் திரும்பிவந்தான் பூமணத்தோடே! — என்பார்கள், கிராமப் புறத்தில். பூமணம்கூட கிடைக்கவில்லையென்பது மட்டுமல்ல, இருந்த புகழ்மணத்தையும் இழந்து வருகிறார், எனத் தெரிகிறது.

**700 கோடி தேவைப்படுகிறது—இதற்காக அமெரிக்காவுக்குப் போகிறார் நிதி மந்திரி—வெற்றியுடன் வருவார்—வாகை சூடி வருக......**

என்றெல்லாம் எழுதின, ஏடுகள்! ஏதோ ஐசனோவர், கோடிக் கணக்கான டாலர்களைக் குவித்து வைத்துக்கொண்டிருப்பது போலவும், இவர் போகாததாலேயே அது கிடைக்காதது போலவும், எண்ணிக்கொண்டு எழுதின, ஏடுகள். கிருஷ்ணமாச்சாரியாரும், போனதும் டாலர் டாலராகக் கிடைக்கும், அதற்கான ஒப்பந்தத்துடன் திரும்பலாம் என்றே, சென்றார்.

**பலனில்லை! பிறகு, உதவி வரலாம், என்று அறிவிக்கப்படுகிறது!!**

உதவி கிடைப்பதற்கான வகைகளில் அமெரிக்காவின் மனதை உருகச்செய்திருக்கிறாராம்! அது உருகி வழிந்ததும், டாலர் டாலராக இங்கே வந்து பொழியப் போகிறதாம்!!—கிருஷ்ணமாச்சாரியார், தெரிவிக்கிறார், இவ்விதம்.

அமெரிக்கரின் மனதைப் பாகாய் உருகச்செய்யும் 'பாய்லர்' என்று இவரை அனுப்பவில்லை, டில்லி! விபரங்களை விளக்கி, வேண்டிய உதவியைப் பெற்று வருவார், என்றே அனுப்பினர்!! போன காரியம், பூஜ்யமாகிவிட்டது—அமெரிக்கர்களை, எவ்வளவு 'தாஜா' செய்தும் உடன் கிட்டவில்லை-'ஆகட்டும். யோசிக்கிறோம்' என்று அனுப்பிவிட்டார்கள்.

இதே பதிலை, டில்லியிலிருந்தே பெற்றுக்கொண்டிருக்கலாம்! எனினும், இரதகஜ துரகபதாதிகளுடன் சென்று, ஏமாந்த முகத்துடன், இல்லம் திரும்புகிறார்!!

வரவுதான் இல்லை — செலவாவது உயர்ந்திருக்கிறதா, என்றால், அந்த இடம்தான் நமக்கு வேதனையையும் கவலையையும் உண்டாக்குகிறது.

கொஞ்சினார் — குழைந்தார்— கம்யூனிஸ்டுகளின் ஆபத்தை எடுத்துச் சொன்னார்—எது, அந்த மோகினிக்கு இனிப்பாகயிருக்கும் என்று யோசித்து அந்த வார்த்தைகளால் அர்ச்சித்தார்— புகழ்ந்தார் — போற்றினார் இவ்வளவும், இவர் மதிப்பை மட்டுமல்ல, இந்தியாவின் மதிப்பையும் மங்கிடச்செய்து இருக்கிறது! இப்படி இவர் பேச்சை அமெரிக்கர் நம்பினதாக தெரியவில்லை—நல்லதோர் 'நகைச்சுவை' போலவும், காரியக் கூத்தாடியின் ஆட்டம் போலவும், கருதியிருக்கின்றனர் எனத் தெரிகிறது. இல்லையெனில் இவர் கையாண்ட குழைவுநெளிவுகளுக்கு எப்படியும் பலன் கிடைத்

திருக்கவேண்டுமே! சில கோடிகளாவது வந்திருக்கவேண்டுமே!!

**இந்தியாவுக்கு, அமெரிக்கா இதுவரையில் உதவிவரக் காரணமே, இது இன்னொரு கூடாரத்தின் பக்கம் போகாமல் பார்த்துக்கொள்ளமேண்டுமே என்கிற அச்சத்தின் காரணமாகத்தான்.**

அந்த அச்சம் உங்களுக்குத் தேவையில்லை — தாசானுதாசனாயிருக்கத்தயார்—விற்கவும் சித்தமாயிருக்கிறோம்-என்று, கிருஷ்ணமாச்சாரியார்—பொறுப்புள்ள டில்லி அமைச்சர் தெரிவிக்கவே, நல்ல வியாபாரிகளான அமெரிக்கர்கள், 'சரக்குக்குக் கிராக்கியிருக்கிறது. எப்படியானாலும், நம்மிடம் தான் வந்து தீரவேண்டும். பேரம் பேசி, இலாபத்தை உயர்த்திக் கொள்ளலாம்' என்கிற கட்டத்துக்கு வந்திருக்கிறார்கள்.

ஏனிப்படியெல்லாம், சுயமரியாதையை விட்டு, பல்லைக் காட்டி, தர்ம தாதாவே என்று இறைஞ்சி, பாட்டுப் பாடி, ஆட்டமாடி, முகத்தைத் தொங்கவிட்டுக்கொண்டு திரும்பவேண்டும்? மூக்காத்தாளிடம் சிநேகம் என்பதால், கொஞ்சம் 'பிகு' செய்கிறாள், இந்த வீட்டுக்காரி! இந்த இருவரையும் தவிர்த்து, சொந்த மனைவி, வீட்டிலிருக்கிறாளே — நல்லதோ, கெட்டதோ, கட்டிய மனைவியைக் கண்சிந்த வைத்துவிட்டு காதலி வேட்டையாட ஏன் செல்லவேண்டும், கணவன்? — இதுதான், நமது கேள்வி. நமக்குப் பொருத்தமான வகையில், நம்மால் முடியக்கூடிய வகையில், ஐந்தாண்டுத் திட்டத்தை வகுத்துக் கொள்ளலாம், அல்லவா? அதை விட்டு ஏன் இப்படி அல்லாடவேண்டும்!!

உலக ஜோதி — சமாதானத் தூதர் — 36 கோடி மக்களைக் கொண்ட நாட்டின் காவலர் — புதிய ஜனநாயகத்தைப் போதிக்கும் நாட்டின் தலைவர் — அடுத்த காந்தி என்றெல்லாம் வருணிக்கப்படும் நேரு பண்டிதரின் ஆட்சியிலே, இந்திய உபகண்டத்தின் தன்மானம், தரை மட்டமாக்கப்படுகிறது.

இது, குடியரசு நாடு! ஆனால், முடியரசு நாடான ஜோர்டான், வெளிநாட்டு உதவி பற்றித் தெரிவிக்கிறது — ஜோர்டன் மன்னர் உசேன், கூறுகிறார்,

"ஜோர்தானுக்கு பிரிட்டிஷாரிடமிருந்து பண உதவி கிடைத்துக் கொண்டு வந்தது. உலக நிலைமையில் ஏற்பட்ட மாறுதலால், நாங்கள் மேற்படி ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டோம். எந்த நாட்டிற்கும் கட்டுப்பட வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. எங்கள் கஷ்ட காலத்தில் அமெரிக்க சர்க்கார் பணவுதவி புரிய வந்தனர். மனமார அவ்வுதவியை நாங்கள் ஏற்றோம். இப்படிப் பணஉதவி செய்தார்களே என்பதற்காக அவர்களுக்கு வால் பிடிக்க வேண்டிய அவசியம் கிடையாது"

மன்னர் ஒருவர், இவ்வளவு தெளிவாகத் தெரிவிக்கிறார்! முடிசூடா மன்னராம் நேருவின் நிதியமைச்சர், வாலென்ன, காலைக்கூடப் பிடிக்கிறார், மனமிரங்குவீர் என்று மண்டியிட்டுக் கெஞ்சிவிட்டு, வெறுங் கையுடன் வருகிறார்!! எவ்வளவு வேதனையான சம்பவம்!!

★

---

உலக அரங்கில்

# மேற்கு ஜெர்மனி

[கோ. கோதண்டராமன்]

அகில உலக அரசியலில், மேலை நாட்டு வல்லரசுகளுக்கும் ருஷ்ய வல்லரசுக்கு மிடையில் நிகழும் ஆதிக்கப் போட்டியில், மண்ணெண்ணெய்க் கிணறுகள் மண்டிக் கிடக்கும் மத்திய கிழக்கு நாடுகளும், மேற்கு ஜெர்மனியுமே இன்று மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது இரண்டாவது உலகப் போருக்குப் பின் ஜெர்மனி இரு நாடுகளாகப் பிரிந்தது. அவை ஒன்று மேற்கு ஜெர்மனி, மற்றொன்று கிழக்கு ஜெர்மனி. மேல் ஜெர்மனியின் தலைநகர் 'பான்' நகரமாகும். கீழ்ஜெர்மனியின் தலைநகர் பெர்லின். மேல் ஜெர்மனி, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட மேலை நாடுகளின் ஆதரவிலும், கீழ்ஜெர்மனி ருஷ்ய நாட்டு ஆதிக்கத்தின் கீழும் இருந்துவருகிறது. மேல் ஜெர்மனி 'நேட்டோ' என்றழைக்கப்படும் "வட அட்லாண்டிக் இராணுவ ஒப்பந்தத்தில் அங்கம் வகிக்கும் பிரதான நாடுகளில் ஒன்று, ருஷியாவுடன் எதிர் காலத்தில் போர் மூண்டால், மேலை நாடுகள் மேல் ஜெர்மனியைப் படைத்தளமாகப் பயன்படுத்தக் கூடும் என்று அரசியல் வல்லுநர்கள் கருதுகிறார்கள். முரண்பட்ட அரசியல் பொருளாதாரத் தத்துவங்களைக் கடைப்பிடிக்கும் காரணத்தால், மேல் கீழ்ஜெர்மனி உடனடியாக இணைந்தாலன்றி, ஐரோப்பாவின் அமைதிக்கு ஆபத்து இருந்துகொண்டே இருக்கும்.

மேல்ஜெர்மனியில் அண்மையில் நடந்த பொதுத்தேர்தலில் இதுவரை அந்நாட்டுச் சான்சலராக இருந்த "டாக்டர் கொன் ராட் அடினேர்" என்பவரின் கிறித்தவ ஜனநாயகக் கட்சி 'புண்டஸ்டாக்' என்றழைக்கப்படும் பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையில் 270 இடங்களை (அதாவது மற்ற கட்சிகளை விட 43 இடங்கள் அதிகம்) கைப்பற்றி அமோகமான வெற்றியைப் பெற்றிருக்கிறது. 497 உறுப்பினர்களைக் கொண்ட [பாராளுமன்றத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளின் நிலவரம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| கிறித்தவ ஜனநாயகக் கட்சி | - 270 |
| சோஷியல் ,, ,, | - 169 |
| சுதந்திர ,, ,, | - 41 |
| ஜெர்மன் கட்சி ... | - 17 |
| மொத்தம் ... | 497 |

கிறித்தவ ஜனநாயகக் கட்சி இப்பொழுது மூன்றாவது முறையாக வெற்றிபெற்றிருக்கிறது. ஜனநாயக வளர்ச்சிக்கு இவ்வெற்றி தடையாக நிற்கும் என்பதுடன் ஆளுங் கட்சி சர்வாதிகாரக் கட்சியாக மாறுவதற்கான ஓர் இருண்ட சூழ்நிலையை உண்டாக்கிவிடுமோ என அஞ்சுவதற்கு இடமுண்டு.

கிறித்தவ ஜனநாயகக் கட்சிக்குக் கிடைத்த மொத்த வாக்குகள் 14,996,504. அடுத்து சோஷியல் ஜனநாயகக்கட்சி 9,490,119 வாக்குகளைப் பெற்றிருக்கிறது, தேர்தல்கள் பெரும்பாலும் சீரிய முறையிலேயே நடத்தப்பட்டன என அறிவிக்கப்படுகிறது. தேர்தலின்போது தொண்ணூறு சதவிகிதம் மக்கள் பங்குகொண்டனர். கிறித்தவ ஜனநாயகக் கட்சியின் வெற்றிக்குப் பெரிதும் காரணமாக இருந்தவர் அக்கட்சியைச் சார்ந்த சான்சலர் "டாக்டர் கொன்ராட் அடினேர்" ஆவார். இவர் எண்பத்தொரு ஆண்டுகள் நிரம்பப்பெற்ற தொண்டு கிழவர். இரண்டாவது உலகப் போரினால் அடியோடு சீர்குலைந்த பொருளாதார நிலையை உயர்த்தியதன் வாயிலாகவும், அயல்நாட்டு விவகாரத்தில் மேலை நாடுகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதன் மூலமாகவும்

மேற்கு ஜெர்மானிய மக்களின் நெஞ்சில் அழியாத இடம் பெற்றவர் இவர். தொழில் துறையில் மீண்டும் பிற நாடுகளுடன் உலக மார்க்கெட்டில் போட்டியிடுமளவுக்கு இன்று மேல் ஜெர்மனி வளர்ந்துள்ளதென்றால், அதற்குக் காரணம் அடினேர் சர்க்கார்தான். வேலையில்லாத் திண்டாட்டம் அங்கு அடியோடு ஒழிக்கப்பட்டு விட்டது. சார் பள்ளத்தாக்கு மேல் ஜெர்மனிக்குத் திரும்பக் கிடைத்து விட்டது "டாக்டர் அடினேர்" சர்வாதிகார ரீதியில் ஆட்சி செய்கிறார் என்று எதிர்க்கட்சிகள் அவரைக் குறைகூறுகின்றன. கத்தோலிக்க சர்ச்சுகள் தேர்தலின்போது, டாக்டர் அடினேரையும், அவர் சார்ந்த கிறித்தவ ஜனநாயகக் கட்சியையும் ஆதரித்தன. வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்து, பொருளாதாரத்தை மேம்பட வளர்த்த காரணத்தால், அடினேர் அரசாங்கத்தை எதிர்த்து, சோஷியல் ஜனநாயகக் கட்சி தேர்தலின்போது, இவ்விரண்டு பிரச்சினைகளைக் காட்டி வெற்றி பெற இயலவில்லை. மாறாக, கிறித்தவ ஜனநாயகக் கட்சி வயது முதிர்ந்தவர்களின் பென்ஷன் தொகையை வெகுவாக உயர்த்தியதாலும், தேர்தலுக்குப் பின் வரிகளை மிகவும் குறைப்பதாக வாக்குறுதி தந்ததாலும் மக்கள் அக்கட்சிக்குப் பேராதரவு தந்துள்ளனர். மேல்ஜெர்மனியை ஆயுதபாணியாக்கும் கொள்கையையும், வடஅட்லாண்டிக் இராணுவ ஒப்பந்தத்தில் அது அங்கம் வகிப்பதையும் எதிர்த்த சோஷியல் ஜனநாயகக் கட்சி, அவைகளை மக்கள் மன்றத்தின் முன்வைத்து ஆளும் கட்சியை தேர்தலில் முறியடிக்க முடியவில்லை. சோஷியல் ஜனநாயகக் கட்சி பெரும்பாலும் அயல் நாட்டுக் கொள்கையையும், மேல்கீழ் ஜெர்மனிகளின் இணைப்புத் திட்டத்தையும் நம்பியே தேர்தலில் குதித்தது. ஆனால் இவ்விரு பிரச்சினைகளும் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை.

மேல்ஜெர்மனியின் தேர்தலில், அடினேர் கட்சி பெற்றிருக்கும் வெற்றி மேலை நாடுகளுக்கு மகிழ்ச்சியையும், ருஷிய நாட்டிற்கு அதிருப்தியையும் தோற்றுவித்துள்ளது. மேல் ஜெர்மனியை அணு, நீர்வளி ஆயுதங்கள் தரித்த நாடாக மாற்றுவதற்கு மேலை நாடுகள் இனி முயலும். இந்த முயற்சி மேலும் வல்லரசுகளிடையே கசப்பை வளர்க்கும் என்பதோடன்றி ஐரோப்பாவின் அமைதிக்கே ஊறு செய்யுமோ என்ற பீதியை உலகத்தில் கிளப்பியிருக்கிறது. ஜெர்மனியின் ஆயுத அதிகரிப்பின் காரணமாகவே இரண்டு உலகப் போர்கள் நிகழ்ந்தன. அதே ஜெர்மனியை மீண்டும் ஆயுதபாணியாக்குவதனால் விளையுங்கேடுகள் விளம்புந் தரமன்று.

★

## 2-ம் பக்கத் தொடர்ச்சி

தத்தா, நீ விட்டு வா", என்று கூறிவிட்டு, அவன் பத்திரமாகச் சென்றடைந்தான் என்கிற செய்தி கேட்ட பின்னரே, உயிர் துறந்தானும்.

✱

பக்தியின் சிறப்பை — விளக்க, புராணம் இத்தகவலைத் தருகிறது.

ஆனால், இவ்வளவு பக்திகொண்டவனுக்குக் கிடைத்த பரிசு என்ன? சாவு! கத்திக்குத்து!!

பக்தி கொண்டோரை, ஆண்டவனின் பெயரைச் சொல்லி, ஏமாற்றும் எத்தர்கள் அந்த நாட்களில் மட்டுமல்ல, இப்போதும் இருக்கிறார்கள்.

சகலகலா வல்லவனையும், ஒரு சாதாரண சந்நியாசி உரு, மண்டியிடச்செய்து விடுகிறது! எழுபது வயதுக் கிழவனையும் இருபது வயது ஆண்டிவேடம் காலில் விழுமாறு செய்துவிடுகிறது! இதனால், சாதாரண எத்தர்கள்கூட, சுலபத்தில் தமது காரியங்களைச் சாதித்துக்கொள்ளுகிறார்கள்.

பழைய நூல்களில்மட்டுமல்ல, இப்போதும் கண்ணெதிரே, காணமலா இருக்கிறோம் இக்காட்சிகளை!

✱

---

## 4-ம் பக்கத் தொடர்ச்சி

டில்லி, தான் செய்திடும் தவறுகளுக்குப் பரிகாரம் காணவேண்டும் — இந்தியை அரசாங்க மொழியாக்கவேண்டும் என்று கொண்டிருக்கும் வெறியினைத் தளர்த்திக்கொள்ள வேண்டும், என்று நாடு எதிர்பார்க்கின்ற நேரத்தில், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல, இந்தச் செய்தி வருகிறது—இந்தி, பள்ளிக்கூடங்களிலும் கட்டாய பாடமாகுமாம்!!

டில்லியின் போக்கு, திரும்புமா, இதே வெறி நீடிக்குமா, என்பதைப் பொறுத்துப் பார்த்தபிறகு, வளர்ந்திடும் தமிழுக்கு கவிதை யாரங்களும் அன்பு மலர்களும் சொரியும் அணை வருக்கும் 'வேலை' இருக்கிறது நிரம்ப! வடவரின் ஆதிக்கவெறி தணிந்துவிட்டால், சரி. இன்றேல் இன்னொரு 'அறப்போர்', தென்னகத்தில் எழக்கூடிய கட்டம், ஏற்பட்டே தீரும். குட்டக் குட்டக் குனிவதுதான் தமிழர்தம் பரம்பரைக்கு, இந்த விடுதலை யுகத்தில் வழங்கப்படும் மதிப்பா, என்பதைப் பார்த்துவிடவேண்டிய சந்தர்ப்பம், நெருங்கிக்கொண்டிருப்பதாகவே நினைக்கிறோம். அதனால்தான் திருவண்ணாமலை மாநாட்டில், திராவிட முன்னேற்றக் கழகம், நாட்டவருக்கு அழைப்பு விடுத்தது! தாழ்ந்தவனும், வீறுகொள்கிற காலம் இது. இப்போது வேண்டுமென்றே நாம் தாழ்த்தப்படுவதை எப்படிச் சகிக்க முடியும்? முல்லை மலருக்கு, எருக்கம் பூவா எசமானன்! குயிலுக்குக் கோட்டான் ஆசிரியன்!! — இல்லை, ஒருபோதும் இந்த அநீதியை நீடிக்க விடுவோர், தென்னகத்தில் இல்லை. புது எழுச்சி, பூத்து வருகிறது! இந்த எழுச்சி வெல்லும் — தாய்மொழிக்கு ஊறுசெய்வோரைத் தாய்தடுத்தாலும் விடாது, முறியடிக்கும்!! இது, உறுதி. உறுதி. உறுதி.

★

# ஏழு லட்சம் செலவிட்ட எருமை!!

எருமை ஒன்றுக்கு ஏழு லட்சம் செலவு! வேறெங்குமல்ல, பாரத புண்ணிய பூமியில்தான்!! எலும்பும் தோலுமே உருவாகக் கொண்டிருந்த எருமை! அதற்காக ஏழு லட்ச ரூபாய்கள் செலவு!!

எங்கே, என்ன, எப்போது கிடைக்கும் என்று தேடியலையும் மதத் தரகர்கள், மக்களைக் காட்டி ஏமாற்றிடும் வகையில், எந்த அற்புதத்தையும் செய்துவிடவில்லை — ஒரு வயலிலே புகுந்தது! மேய்ந்தது!!

உருவமே எலும்பும் தோலுமாக யிருந்ததென்றால், வளர்த்தவர் வயிறாரவா தீனிபோட்டிருக்கப் போகிறார்? நல்ல பசி! எதிரே பச்சைப் பசேலென்ற கழனி காட்சியளித்தது —புகுந்துவிட்டது!!

சட்டம் கொட்டும், தகாத செயல்களில் ஈடுபடக்கூடாது, பசித்தாலும் சந்தோஷமாகச் சாகவேண்டுமே ஒழிய 'வளமான'வைகள் பக்கம் கண்ணைத் திருப்பலாகாது, என்று மனிதன்தான் பயப்பட வேண்டும். அது, பகுத்தறிவில்லாத மிருகம்! பசித்தது. பசியைத் தீர்த்துக்கொள்ள உடனே ஈடுபட்டது!!

கழனிக்குரியவன் கண்டான். தான் பாடுபட்டு வளர்த்திட்ட பயிரிலிறங்கி, நாசம் செய்யும் எருமையைப் பிடித்தான். இழுத்துக் கொண்டுவந்து அந்த ஊர் நகரசபைக்குச் சொந்தமான 'பட்டி'யில் அடைத்தான். ஒரு நாள்! இரண்டு நாள்!! யாரும், தேடி வரவில்லை, எருமையை. பட்டிக்குள் அடைத்துவைத்து, இரண்டு வேளையும் தீனிபோட எங்கே போவார் அதிகாரி? எங்காவதுபோய் பிழைத்துக் கொள்ளட்டும் என்று, அதிகாரி அவிழ்த்து, பட்டியை விட்டு வெளியேற்றினார். சுதந்திரம் பெற்ற எருமை, வாலை ஆட்டிக்கொண்டு, எங்கோ போய் விட்டது! எத்தனையோ வேலைகள் அந்த அதிகாரிக்கு? அமைச்சர்கள் 'விஜயம்' செய்தனரோ, அதிகாரிகள் வந்தனரோ, குடும்பத் தொல்லையோ, அவரும் விரைவில், இந்த எருமையைப்பற்றி மறந்துவிட்டார்!!

ஒரு மாதத்துக்குப் பின், ஒரு மிராசுதார், கனைத்துக்கொண்டே நுழைந்தார், நகரசபைக்குள். "எங்கே என் எருமை?", என்று கேட்டார். மிராசுதார், கொழுத்த பணக்காரர்! எருமையிடம் பாலிருந்திருந்தால் இப்படியா விட்டிருப்பார்? மரத்துப் போகவே அலட்சியம் காட்டினர்! எங்காவது ஊராரின் வயலிலோ, கொல்லைகளிலோ, புகுந்து தின்று பிறகு வந்து சேரும் என்கிற நம்பிக்கை அவருக்கு. தன் வீட்டு எருமையல்லவா? தன் சுபாவம் அதற்கும் இருக்கவேண்டும் என்று எதிர்பார்த்தார் போலும்!!

அதிகாரி மிரண்டார்—என்ன பதில் சொல்லுவதென்று தெரியவில்லை. 'விசாரிக்கிறோம்', என்று சொல்லியனுப்பினர். மாதங்கள், பல ஆயின. மிராசுதார், வண்டியைப் போட்டுக் கொண்டு வருவார் — விசாரிப்பார். அதிகாரி, 'ஆகட்டும் பார்க்கலாம்' என்பார். ஒருதடவை, அதிகாரி கொஞ்சம் ஆத்திரத்தோடு, பதில் கூறவே மிராசுதாரருக்குக் கடும் கோபம் வந்துவிட்டது. வார்த்தை தடித்து, அடிதடி அளவுக்கு வளர்ந்து, வழக்கும் கோர்ட்டுக்குப் போயிற்று!!

மிராசுதாரர், ஊருக்கு வந்தார். யார், தன் எருமையைப் பட்டியில் கொண்டுபோய் அடைத்தானே, அவனைக் கூப்பிட்டு விசாரித்தார், "என்ன திமிர் உனக்கு? ஊம்! பண்ணை மாடு என்று தெரிந்தும் எப்படி பட்டியில் கொண்டு அடைக்கலாம்?"

"என் கழனியை நாசம் செஞ்சுதுங்களே..."

"செஞ்சால் என்ன! குடிமுழுகி போயிடுமோ?"

"குடி முழுகித்தாங்க போயிடும். ஏழை நான். அந்தக் கழனியை நம்பித்தானே, காலந் தள்றேன். உங்களைப்போல பணக்காரங்களுக்கு, என்றால் பரவாயில்லை..."

"ஏய்! உனக்கு கொழுப்பு ஏறிவிட்டது, இல்லைன்னா, கொண்டுபோய் அடைப்பாயா பண்ணை எருமையை? செய்ததையும் செய்துவிட்டு என்னை வேறு எதிர்த்துப் பேசுவாயா எதிர்த்து?"

"நான் உங்களை எதிர்த்துப் பேசலீங்க. உண்மையைச் சொன்னேன் ......"

"மூடுடா வாயை!"

"எனக்கும் மானபிமானம் உண்டுங்க..."

"மகாமனிதன் இவன்!"

இப்படி, ஏழைக்கும் மிராசுதாரருக்கும் பேச்சு வளர்ந்து, "உன்னை என்ன செய்கிறேன் பார்!" என்று மீசையை முறுக்கி, வண்டிபோட்டுக் கொண்டு நகருக்குள் நுழைந்து, வக்கீலைக் கலந்து, "அந்த விவசாயி தன் மாட்டைத் திருடிக்கொண்டு போனதாக" ஒரு வழக்குப்போட்டு விட்டார்.

ஏழை, இதைக் கேள்விப்பட்டதும், அழுதான், அலறினான். அவனால் எப்படி ஒரு வழக்கை நடத்தமுடியும்? பொதுமக்கள் கொடுத்த பணம் இருக்கிறது நகர சபையில்! இவனைப் போன்ற ஏழைகள் உழைத்துக் கொடுத்தது நோட்டு நோட்டாகயிருக்கிறது பிரபுவின் பெட்டியில்!! இவனிடம் என்ன இருக்கிறது? "நீதியிருக்கிறது. நியாயம் இருக்கிறது. நான் எருமையைத் திருடவில்லை" என்று குமுறினான். நீதியும் நியாயமுமா தேவை இந்த விசித்திர உலகில் வாழ! பணம் வேண்டுமே!! வழக்கு, அவன்மீதும் பதிவுசெய்யப்பட்டது. ஓடினான், தான் எருமையைக் கொண்டுபோய்விட்டபட்டிக்கு. அதிகாரியால் தக்கபதில் சொல்ல முடியவில்லை.

"ஆமாம்! நான், இங்கே கொண்டு வந்து அடைத்ததாவது ஞாபகம் உள்ளதோ?"

"இதையெல்லாம் ஞாபகம்வைத்துக்கொள்ளமுடியுமாக்கும்..."

எதுவும் புரியவில்லை, ஏழைக்கு. தான் திருடவில்லை, பட்டியில் கொண்டுவந்து அடைத்தேன், அதைத் திறந்துவிட்டது இந்த அதிகாரிதான், என்பதை நிரூபிக்க அவனுக்கு வேறு வழி தெரியவில்லை. அவனும், கடன் வாங்கி, தன் மானத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காக, அந்த நகரசபையின்மீது ஒரு வழக்குப் போட்டான்.

நிலப்பிரபுமீது நகரசபையினரின் வழக்கு — விவசாயியின்மீது நிலப்பிரபு வழக்கு — நகரசபையின் மீது விவசாயி வழக்கு. மூன்று வழக்குகள்! ஒரே கோர்ட்டில்!!

ஆண்டு ஒன்றுக்கு மேலாயிற்று. வழக்குகளை தீர விசாரிக்க, எந்த

வயலில் அந்த எருமை மேய்ந்தது என்பதை நேரில் போய்ப்பார்த்தார், நீதிபதி! வக்கீல்கள், ஒவ்வொரு சார்பிலும் கொண்டுவரப்பட்ட சாட்சிகளை விசாரணைமேல் விசாரணை செய்தனர். கீழ்க் கோர்ட்டிலிருந்து பிறகு மேல் கோர்ட்டுக்குப் போயிற்று. பணம், ஒவ்வொருவர் பங்கிலும் பறந்தது!!

இந்நிலையில், ஒருநாள், காணமற்போன அந்த எருமை ஆடியசைந்து கொண்டு, நிலப் பிரபுவின் கொட்டிலுக்கு வந்து சேர்ந்தது. இதைக் கேள்விப்பட்ட விவசாயி, கோர்ட்டிற்கு, ஒரு மனு சமர்ப்பித்தான்! நகரசபையும், ஒரு மனுச் செய்தனர்!! நீதிபதி, நிலப் பிரபுவுக்கு, அந்த எருமையைக் கொண்டு வரும்படி உத்திரவிட்டார். எருமையும் கொண்டு வரப்பட்டது. வேடிக்கை பார்க்க ஆயிரக் கணக்கான மக்கள் திரண்டனர். கடைசியில், வழக்குகள், நீதிபதியின் யோசனையின் பேரிலும், பெரிய மனிதர்களின் சமரச முயற்சியாலும் முடிவுக்கு வந்தன.

ஆனல் 50-ரூபாய் கூடப் பெருத இந்தச் சாதாரண எருமைக்காக, ஏறக் குறைய ஏழு லட்சம் ரூபாய் செலவாம்! ஏ, அப்பா!! இதுமட்டுமல்ல, இந்த நோஞ்சல் எருமையின் படமும், செய்தியும் வெளியிடாத பத்திரிகைகளே இல்லையாம்.

நாகபுரிக் கருகில் நடைபெற்ற இவ்வழக்குச் செய்தி, கடல் தாண்டியும் சென்றது! வெளிநாட்டு ஏடுகள் எல்லாம் வேடிக்கை வேடிக்கையாகப் போட்டிருக்கின்றன!!

ஒரு சாதாரண எருமை — அதற்காக இவ்வளவு இலட்சம்? நகரசபை அதிகாரி கொஞ்சம் அமைதியோடு பதில் சொல்லியிருக்கலாம்— மிராசுதாரரும், விவசாயியிடம் அனுதாபம் காட்டியிருக்கலாம் ஆனல், ஒவ்வொருவருடைய வீம்பும், இவ்வளவு வீண்விரயத்துக்கு வித்திட்டுவிட்டது! இதிலும், விந்தையென்னவெனில், பயிரையும் இழந்த விவசாயி, தன் மானத்துக்காக, கடனாளியும் ஆனது தான்!!

★

## அந்தமானில்

மத்திய அந்தமானின் தலைநகராகிய லாங்-ஐலண்டில் தமிழ் சகோதரர்களின் முயற்சியால் "தமிழர் படிப்பகம்" என்ற பெயரில் ஒரு படிப்பகம் திறந்து அதன் ஆரம்ப விழாவை மிக சிறப்புடன் கொண்டாடப்பட்டது.

# "அரிசிக் கிண்ணம்"

—[மதனகோபால்]—

"கத்தியின்றி, இரத்தமின்றி ஆசியாவின் அரிசிக் கிண்ணம் எனப்படும் தாய்லாந்து நாட்டிலே இராணுவப் புரட்சியொன்று நடைபெற்றது சென்ற செப்டெம்பர் திங்கள் 17-ம் நாள். மார்ஷல் பிபுல் சாங்ராம், தாய்லாந்தின் முதன் மந்திரி, அதிகாரத்தினின்றும் துரத்தப்பட்டார்.

ஏறக்குறைய இருபத்து நாலு ஆண்டுகளில் பன்னிரண்டு முறைகள் அரசாட்சிகள் கவிழ்க்கப்பட்டு வேறு ஆட்சிகள் ஏற்படுத்தப்பட்டன. தாய்லாந்தின் அரசியல் சட்டம் மாற்றப்பட்டால் அது ஆருவது தடவையாகஇந்த இருபத்துநாலுஆண்டுகளில் மாற்றப்பட்டதாக இருக்கும்.

சியாம் அல்லது தாய்லாந்து நாட்டில் நடக்கும் புரட்சியைப் பற்றிஅதிகம் யாரும் கவலைப்படுவதில்லை. ஏனெனில் அங்கு நடக்கக் கூடிய புரட்சியைப்போன்று வேறு எங்கும் நடப்பதில்லை. தாய்லாந்தின் தலைநகரான பாங்காக்கைத்தான் அது பெரிதும் பாதிக்கிறது. மற்ற இடங்களில் அதைப் பற்றிய அறிகுறிகள் தென்படுவதில்லை. அங்கு வசிப்போரும் அதைப்பற்றி அவ்வளவாக அக்கரை எடுத்துக்கொள்வதில்லை.

தாய்லாந்து என்பதற்கு அர்த்தம் இலக்கியத் துறையிலே பார்த்தோமானல் "சுதந்திர மக்களது நாடு" என்று வருகிறது. தாய்லாந்து எனப்படும் பெயர் சமீப காலத்தில் ஏற்பட்டது. அதன் பழைய பெயர் சியாம் என்பது. தாய்லாந்து ஒரு முடியாட்சி நாடாகவே இருந்துவருகிறது.

தாய்லாந்தின் நிலப்பரப்பு 1,98,247 சதுர மைல்கள் தான். அதனுடைய மக்கட் தொகையோ 1,99,00,000. அதன் நிலப்பரப்பும், மக்கட் தொகையும் நாம் கோரும் திராவிடத்தின் நிலப்பரப்பைவிட மக்கட் தொகையைவிட குறைவுதான்-அதுவும் பலமடங்கு குறைவு.

தாய்லாந்தின் சரித்திரம் கி. பி. பதின்மூன்றும் நூற்றுண்டிலே "சுகோதை" என்னும் மன்னர் பரம்பரையின் துவக்கத்திலின்று ஆரம்பமாகின்றது. அதற்குப்பின் பல மன்னர்கள் தோன்றி மறைந்துள்ளனர். அவர்களிலே மிக் குறிப்பிடக்கூடியவர் 'சுலாலங்கார்ன்' என்னும் மன்னன் ஆவான். அவனுடைய ஆட்சிக் காலத்தில்தான் சியாம் தன்னுடைய பழைய பத்தாம் பசலி நிலையினின்று நாகரீகப்படிக்குக் காலடி எடுத்துவைத்தது. அதுமட்டுமல்லாமல் அந்த மன்னனுக்கு வேறு வகையில் பெயர் இருந்தது. அவனுக்கு எண்பத்துநாலு மனைவிகளாம் 362 குழந்தைகளாம்!

அடுத்து அவனுடைய மூத்த மகன் 'வஜிரவுத்' அல்லது ஆறும் 'ராமா' எனப் படுபவன் ஆட்சிப் பீடம் ஏறினன். அவன் 1910-லிருந்து 1925-வரை ஆண்டான். அவன் உலகமகா கவிஞன், நாடகப் பேராசிரியர் ஷேக்ஸ்பியரின் நாடகங்களைச் சியாமிய மொழியில் பெயர்த்தான். அதுமட்டுமன்று. அவன் சொந்தமாகப் பல நாடகங்களை இயற்றினன். அந்த நாடகங்களில் நடிக்கவுஞ் செய்தான். நாடகமாடியவன், நாடகமியற்றியவன்தான், நல்ல முறையிலே நாடும் ஆண்டான்!

அவனுக்கு குழந்தைகள் இல்லாததால் அவனுடைய தம்பிகளுக்கு வாய்ப்புக் கிடைத்தது, அரசபீடமேறி அவனுடைய முதல் தம்பி 'மகிதால்' முடியை மறுத்துவிட்டான். அவன் அமெரிக்கா சென்று மருத்துவராக விரும்பியதே காரணம். மற்ருெரு தம்பியான 'பிரஜாதிபோக்' மன்னனானன்.

மன்னன் பிரஜாதிபோக் தன்னுடைய தாயகத்தில் ஒரு மக்கள் சபை அமைய வேண்டும் என்று விரும்பினன். ஆனல் அவனுடைய மாமனை நாகன் சவான் அது ஆபத்துத் தரக்கூடியது என்று கூறித்தடுத்தான். எனவே அவன் விருப்பம் நிறைவேருமல் நின்றது.

அதற்குள் பாங்காக்கில் புரட்சிக்கு ஏற்ற வித்துக்கள் ஊன்றப்பட்டன. மக்கள் அதில் அவ்வ

ளவு அக்கரை காட்டவில்லை. பின்னர் 1932-ஜூன் திங்கள் 24-ம் நாள் புரட்சிக்காரர்கள் கலகம் புரிந்தனர். ஒருவனைத் தவிர மற்ற எல்லா இளவரசர்களையும் அரண்மனையிலேயே பலத்த காவல்களுக்கிடையே கைதிகளாக வைக்கப்பட்டனர். புரட்சிக்காரர்கள், — மேல்நாட்டில் படித்துவந்த இளவயது இராணுவ அதிகாரிகளாகவும், போலீஸ் அதிகாரிகளாகவும், பொதுமக்கள் சிலருமாகவும், "நாய் பிரிதி பனோமியாங்" என்பவர் தலைமையில் புரட்சி செய்தனர்.

புரட்சிக்காரர்களின் புது அரசாங்கம் மன்னனை கப்பலில் ஏறி வரச்சொல்லி வேண்டுகோள் அல்ல உத்தரவு அனுப்பியது. ஏழுநூறு ஆண்டுகளில் இது தான் முதல்தடவை ஒரு மன்னன் உத்தரவு பெறுவது, சியாம் நாட்டில். அந்த உத்தரவை அலட்சியப்படுத்தி அரசன் புகைவண்டியில்தான் வந்தான்.

இதைக்கண்ட புரட்சியாளர்கள் மன்னிப்புக் கேட்டனர் மன்னனிடம். புரட்சி நடந்தது பெரும்பாலும் மன்னனைச் சுற்றியிருந்த இளவரசர்கள், அதிகாரிகளின் ஆணவப் போக்காலும் ஊழல்களாலும் தான்.

புது அரசியல் அமைப்பு 1932ல் டிசம்பர் பத்தாம் நாள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்படி மன்னனுக்கு உதவியாக அல்ல ஆட்சி புரியவே ஒரு மக்கள் மன்றம் தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படும். "கத்தியின்றி இரத்தமின்றி" நடந்த அந்தப் புரட்சிக்கு நினைவாக ஒரு சின்னம் "மக்களாட்சியின் நினைவுச் சின்னம்" என்ற பெயரில் நிறுவப்பட்டது.

நடுவில் நடந்த கலகங்களால் பிரஜாதிபோக் மன்னன் 1934-ல் இங்கிலாந்து சென்றான். பின் நாடு கடத்தப்பட்டான், 1935-மார்ச் 2-ம் நாளில்.

அவனுடைய அண்ணன் மகனை ஆனந்தா என்பவன் அரசபீடமேறினன். அவனுக்கு வயது அப்பொழுது ஒன்பதுதான். அதனால் அவனுக்கு உதவியாக ஆட்சி செய்ய மூவர் நியமிக்கப்பட்டனர்.

1933-ல் 'பியாபாஹோல்' முதன் மந்திரியாக ஆனார். பின் க(ர்)னல் பிபுல் சாங்ராம் முதன் மந்திரியானார் 1938-ல் புதிய முதன் மந்திரி செய்த முதல் காரியம் சியாம் என்பதை தாய்லாந்து என்று மாற்றிய பெயர் மாற்றம்தான்.

ஜப்பானியர்கள் தங்கள் போருக்கேற்ற தலமாக தாய்லாந்தைப்பயன்படுத்திக்கொண்டனர். ஜப்பானியர்களை எதிர்த்து போரிட்டால் விளையும் பலனை எண்ணிப்பார்த்து பிபுல் பேசாமல் ஒப்புக்கொண்டார், வெடிகுண்டு வெடிக்காமல், இரத்தம் சிந்தாமல் ஜப்பானியர்கள் தாய்லாந்தை தங்கள் வசமாக்கிக் கொண்டார்கள். ஜப்பானியருடன் சேர்ந்து தாய்லாந்தும் 'நேச'நாடுகள் மீது போர் தொடுத்தது.

1932-ல் நடைபெற்ற புரட்சிக்கு பிபுலின் பக்கபலமாக இருந்தார் ஒருவர். பாரிசிலே படித்த அவர் தான் 'பிரிதி'.

பிரிதி ஜனநாயகத்தின்மீது நம்பிக்கை வைத்திருந்தவர். அவர் தலை மறைவாகச் சென்று எதிர்ப்பைக் காண்பித்துக் கொண்டிருந்தார். நேச நாடுகளால் பிபுல் பகைவனுக்கு உடந்தையாக இருந்தவன் என்று குற்றம் சாட்டப்பட்டார். அதே சமயத்தில் அவர்களால் பிரிதி மிகவும் புகழப்பட்டார்.

போர் முடிந்தது. பிரிதியால் அதிகாரத்தைக் கைப்பற்ற இயலவில்லை. இராணுவத்தின் பக்க பலத்தால் பிபுல் அதிகாரத்தைக் கைப்பற்றினர். பிரிதி தோற்றார். அது மட்டுமின்றி, மன்னன் ஆனந்தாவைக் கொன்ற குற்றமும் சாட்டப்பட்டார். பிபுல் தன் அதிகார பலத்தால் பிரிதிமீது குற்றஞ் சாட்டினர். இது நாள் வரை அந்தக் கொலை மர்மமாகவே இருக்கிறது. இந்த நிலையில் மக்களின் வெறுப்பு பிரிதிமீது திரும்பியது. எனவே பிரிதி பீகிங்கிற்கு ஓடவேண்டிய நிலை ஏற்பட்டது.

வெற்றிகரமாக பிபுல் கொலைக் குற்றத்தை சாட்டினர் பிரிதிமீது. இந்த வகையில் அவருக்கு அமெரிக்கரின் நட்புக்கூட ஏன் உதவியும் கிடைத்தது. பொதுவுடைமைச் சீனவில் புகலிடம் தேடியவன் நல்லவனக இருக்கமாட்டான் என்ற அமெரிக்கரின் பிற்போக்குத் தன்மைதான் காரணம் போலும்.

பிபுல் சாங்ராம் அமெரிக்கரின் உதவி மட்டுமிருந்தால் அவர் ஆசைநிறைவேறியிருக்காது. அவருக்குப் பக்கபலமாக போலீஸ் மந்திரி ஜெனரல் 'பாவோ'வின் பக்கத் துணையிருந்ததால் தான் வெற்றிகரமாக எண்ணிய காரியங்களை முடிக்க முடிந்தது. தன் பாதையில் எதிர்த்து நின்ற எதையும் விட்டு வைக்கவில்லை இந்த போலீஸ் அதிகாரி.

முதல் மந்திரி பிபுல் சாங்ராம் கூட இருந்த போலீஸ் அதிகாரியின் கைக்குள் அடக்கமென்றும், அவர் விரும்பினால் அவரேகூட முதன் மந்திரியாக எந்த நேரத்திலும் ஆகலாம் என்றும் கூறப்பட்டது.

நாட்டின்வளம் இந்தச் சிலரிடம் சிக்கி அவர்கள் சொகுசாக வாழ்க்கை நடத்தப் பயன்பட்டது. பெரும்பாலான தொழிற்சாலைகள் அவர்கள் கையில்தான். அவர்கள் வாங்கும் இலஞ்சமும், நிர்வாக ஊழல்களும் நாடறிந்தவை. இருந்தாலும் யாராலும் ஒன்றும் செய்யமுடியவில்லை. இருபது பவுண்டு அபினிக்காக ஐம்பதாயிரம் பவுன்கள் கொடுக்கப்பட்டனவாம் இலஞ்சமாக ஜெனரல் பாவோவிற்கு.

நாட்டின் நலத்திற்காகப் பாடுபடாமல் இந்த நரிக்குணமுடையோர் தனலத்துக்காகப் பாடுபட்டனர். அதன பலனை அனுபவிக்கின்றனர். மூன்று வாரங்கட்கு முன்னர் 58 இராணுவத் தலைவர்கள் ஜெனரல் 'சரித் தனரட்' தலைமையில் பிபுலைக் கண்டு பதவியினின்று விலகச் சொல்லினர். அவர் மறுத்தார்.

செப்டம்பர் 16ல் இராணுவத்தினர் அமைதியுடன் அரசாங்கத்தைக் கைப்பற்றினர்.

பிபுல் சாங்ராம் 'கம்போடியா'விற்குத் தப்பிச்சென்று, இப்பொழுது அமெரிக்கா போக இருக்கிறாராம். புரட்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றிய அதே ஆள் இன்று புரட்சியால் விரட்டியடிக்கப்பட்டார்!!